# இலக்கண வினாவிடை

யாழ்ப்பாணத்து நல்லூர்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

அருளியது.

வெளியீடு

தென்றல் பப்ளிக்கேஷன், கொழும்பு - 06

☎: 011-2360239.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பரமபதி துணை

# இலக்கண வினாவிடை

☞ இந்நூல் இடைநிலைக்கல்வி, க.பொ.த. (சாதாரண) தரம், க. பொ. த. (உயர்)தரம், பட்டப்படிப்பு மாணவர் கள் தமிழ்மொழியை நேர்த்தியான முறையில் பயில வும், பரீட்சைகளில் உசாத்துணை நூல்களாகப் பயன் படுத்தவும் பேருதவியாக அமையும்.

யாழ்ப்பாணத்து நல்லூர்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்**

அருளியது.

வெளியீடு

**தென்றல் பப்ளிக்கேஷன்,**

**கொழும்பு -06.**

**Tel: 011-2360239, 0722-875625.**

MURALI BOOK CENTRE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2019.07.19.

# இலக்கண வினாவிடை

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் அருளியது.


| | |
|---|---|
| படியெடுப்பும் மீள் பதிப்பும் | : 01 தை 2004 |
| உரிமை | : தமிழ்கூறும் நல்லுலகத்தார் அனைவருக்கும்., |
| தாள் | : 70 கிராம் |
| பக்கம் | : 74 + i + iv |
| எழுத்து | : 11 புள்ளி - கழகம் |
| பதிப்பகம் | : தென்றல் பப்ளிக்கேஷன், 135, கனல் பாங் வீதி கொழும்பு –06. Tel : 011-2360239. |
| பதிப்பாசிரியர் | : இ. க. சிவஞானசுந்தரம், M.A |
| கணனி அச்சமைப்பு | : SDS கம்பியூட்டர் சேர்விஸ் 43, 55வது ஒழுங்கை கம்டன் ஒழுங்கை முடிவில் கொழும்பு –06. Tel : 011-2553265, 5-518812 |
| அச்சிட்டோர் | : மாணவர் மறுதோன்றி மையம் சென்னை - 600 001 T.P. 25382513. |
| இலங்கை விலை | : ரூபா 75/- |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இலங்கை, இந்தியாவைப் பொறுத்தமட்டில் தேசிய உணர்வுகள் அலைமோதிய கால கட்டத்தில், தமிழ் மக்கள் தங்கள் தனித்துவத்தையும், பாரம்பரியத்தையும் நிலைநாட்ட முனைந்து நின்ற வேளையில் நாவலர் பெருமானின் பணி மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகிறது. சமய ஆசாரங்களையும், ஆகமவிதிகளையும் பேணுவதில் இறுக்கமான நிலைப்பாட்டைக் இவர் கொண்டிருந்தார் அந்நிய ஆதிக்கத்தால் தமிழர் தம் கலாசாரங்கள் சமயநிலைகள் நிலைகுலைந்திருந்த வேளையில் சமயப்பணியோடு மட்டும் நின்று விடாது, தமிழ்ப் பணியும் ஆற்றியமை அவரது ஆழ்ந்த தூர நோக்கையும், சிந்தனைச் சிறப்பையும், தமிழ் ஆற்றலறிவுப் பொக்கிஷத்தையும் உலகுக்கு எடுத்துக்காட்டி நிற்கின்றது.

முச்சங்கங்களால் வளர்த்தெடுக்கப்பட்ட தமிழ்ப்பாஷையை முன்போல வளர்த்தெடுக்க வேண்டுமென முன்னின்று உழைத்தவர் இவர். பேச்சாற்றலுக்குச் சிறந்து விளங்கியமையால் "**நாவலர்**" என்றும்., உரைநடையைக் கையாண்ட திறமையால் "**வசனநடை கைவந்த வல்லாளர்**" எனவும் பாராட்டப்பட்டார். மனிதாபிமானம், தேசாபிமானம், தன்மானம் முதலானவற்றைச் சமயங்கள் ஊடாகவும், தமிழ்மொழி ஊடாகவும், செயல் ரீதியாக மக்களுக்கு ஊட்டியவர் என்ற வகையில் அவர் புதுக்கிய நூல் வரிசையில் "**சைவவினாவிடை**" (முதலாம் இரண்டாம் புத்தகம்) என்ற நூலையும் அதற்கு அடுத்ததாக "**இலக்கணச் சுருக்கம்**" என்ற இலக்கண நூலையும், "**இலக்கண வினாவிடை**" என்ற இவ்வரிய இலக்கண நூலையும் படியெடுத்து மறுபதிப்புச் செய்வதானது நாவலர் பெருமானுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகவே கொள்ள வேண்டும். **தென்றல் பப்ளிகேஷன் (கொழும்பு - 6)** நிறுவனம் பதித்துள்ள இவ் "**இலக்கணவினாவிடை**" என்ற நூல் தமிழ் மொழிக்கு நாவலர் பெருமான் செய்த பணியைப் போற்றும் முகமாகவும் அதன்படி தமிழ்பாஷையை நேர்த்தியான முறையில் பயிலவும் பரீட்சைகளில் உசாத்துணை நூலாகப் பயன்படுத்தவும் உதவும். அதற்கு உதவுவதில் நாம் பெருமையடைகிறோம். (மாணவரின் தேவை கருதி நாவலர் பெருமானின் இலக்கணச் சுருக்கத்தின் ஒரு பகுதி பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது.) அவ் வகையில் நாவலர் பெருமானை ஏத்திக் கைதொழுது கூப்புதல் நம்கடமை ஆகும்.

**"நாவலர் பெருமான் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே?"**

**பதிப்பாசிரியர்**

**இ.க. சிவஞானசுந்தரம், எம்.ஏ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கண வினாவிடை

## பொருளடக்கம்

### 1. எழுத்ததிகாரம்


எழுத்தியல் ........................................ 1
பதவியல் ........................................ 6
புணரியல் ........................................ 13


### 2. சொல்லதிகாரம்


பெயரியல் ........................................ 24
வினையியல் ........................................ 30
இடையியல் ........................................ 38
உரியியல் ........................................ 39


### 3. தொடர் மொழியதிகாரம்


தொகைநிலைத் தொடரியல் ........................................ 39
தொகாநிலைத் தொடரியல் ........................................ 42
ஒழிபியல் ........................................ 43


❖ பின்னிணைப்பு : (இலக்கணச் சுருக்கம்)


ஒழிபியல் ........................................ 46
பகுபத முடிபு
பெயர்ப் பகுபதங்கள் ........................................ 64
வினைமுற்றுப் பகுபதம் ........................................ 66
பெயரெச்சப் பகுபதங்கள் ........................................ 70
வினையெச்சப் பகுபதங்கள் ........................................ 70
சொல்லிலக்கணங் கூறுதல் ........................................ 72
சொற்றொடர் இலக்கணங் கூறுதல் ........................................ 74-75




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
பரமபதி துணை

# I. எழுத்ததிகாரம்

## 1. எழுத்தியல்

எழுத்துக்களின் பெயர்:

1. **தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?**
உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்த வெழுத்து என நான்கு வகைப்படும்.

2. **உயிரெழுத்து எவை?**
அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ - இப் பன்னிரண்டும் உயிரெழுத்தாம்.

3. **உயிரெழுத்து எத்தனை வகைப்படும்?**
குற்றெழுத்து, நெட்டெழுத்து என இரண்டு வகைப்படும்.

4. **குற்றெழுத்து எவை?**
அ, இ, உ, எ, ஒ - இவ்வைந்தும் குற்றெழுத்தாம்.

5. **நெட்டெழுத்து எவை**
ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ - இவ்வேழும் நெட்டெழுத்தாம்.

6. **மெய்யெழுத்து எவை?**
க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் - இப்பதினெட்டும் மெய்யெழுத்தாம்.

7. **மெய்யெழுத்து எத்தனை வகைப்படும்?**
வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என மூன்று வகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8. வல்லெழுத்து எவை?**

க், ச், ட், த், ப், ற் - இவ்வாறும் வல்லெழுத்தாம்.

**9. மெல்லெழுத்து எவை?**

ங், ஞ், ண், ந், ம், ன் - இவ்வாறும் மெல்லெழுத்தாம்.

**10. இடையெழுத்து எவை?**

ய், ர், ல், வ், ழ், ள் - இவ்வாறும் இடையெழுத்தாம்.

**11. இவ்வெழுத்துக்களுள் ஒன்றுக்கொன்று இனமாவன உளவோ?**

உயிர்களுள் அகரத்துக்கு ஆகாரமும், இகரத்துக்கு ஈகாரமும், உகரத்துக்கு ஊகாரமும், எகரத்துக்கு ஏகாரமும், ஐகாரத்துக்கு இகரமும், ஒகரத்துக்கு ஓகாரமும், ஔகாரத்துக்கு உகரமும் இனமாவனவாம்.

மெய்களுள் ககரத்துக்கு ஙகரமும், சகரத்துக்கு ஞகரமும், டகரத்துக்கு ணகரமும், தகரத்துக்கு நகரமும், பகரத்துக்கு மகரமும், றகரத்துக்கு னகரமும் இனமாவனவாம்.

**12. உயிர்மெய் எழுத்து எவை?**

உயிரும் மெய்யும் கூடி வழங்குகின்ற க முதல் னௌ ஈறாக உள்ள இருநூற்றுப் பதினாறும் உயிர்மெய்யெழுத்தாம்.

**13. ஆய்தவெழுத்து எது?**

குற்றெழுத்துக்கும் உயிர்மெய் வல்லெழுத்துக்கும் நடுவே மூன்று புள்ளி வடிவையுடையதாய் வரும் ஓரெழுத்து ஆய்தவெழுத்தாம்.

எ.்.கு, அ.்.து

**14. ஆகத் தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்கள் எத்தனை?**

| | |
|---|---|
| உயிரெழுத்து | 12 |
| மெய்யெழுத்து | 18 |
| உயிர்மெய்யெழுத்து | 216 |
| ஆய்தம் | 1 |
| ஆக | 247 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**15. சுட்டெழுத்து எவை?**

அ, இ, உ - இம்மூன்றுஞ் சுட்டுப் பொருளில் வரும்போது சுட்டெழுத்தாம்.

| | | |
|---|---|---|
| அவன் | இவன் | உவன் |
| அவ்வீடு | இவ்வீடு | உவ்வீடு |

**16. வினாவெழுத்து எவை?**

ஆ, எ, ஏ, ஓ என்னும் உயிரெழுத்து நான்கும், யா என்னும் உயிர்மெய் எழுத்து ஒன்றும், வினாப் பொருளில் வரும்போது வினாவெழுத்தாம்.

| | | |
|---|---|---|
| அவனா | ஏது | மரமோ |
| எவன் | இவனே | யாவை |

**17. குற்றியலுகரமாவது யாது?**

தனிக் குற்றெழுத்து அல்லாத மற்றைய எழுத்துக்களுக்குப் பின்னே சொல்லிறுதியிலே வல்லின மெய்யின் மேல் ஏறி நிற்கும் உகரம் குற்றியலுகரமாம். அக்குற்றியலுகரம் ஈற்றெழுத்தாகிய தனக்கு அயலெழுத்தை நோக்கி ஆறு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| நாகு | - | சொற்றொடர்க் குற்றியலுகரம் |
| எஃகு | - | ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் |
| வரகு | - | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் |
| தச்சு | - | வன்றொடர்க் குற்றியலுகரம் |
| வண்டு | - | மென்றொடர்க் குற்றியலுகரம் |
| சால்பு | - | இடைத்தொடர்க் குற்றியலுகரம். |

**18. முற்றியலுகரமாவது யாது?**

மெல்லின மெய்யின் மேலும் இடையின மெய்யின் மேலும் ஏறி நிற்கும் உகரமும், தனிக்குற்றெழுத்துக்குப் பின் வல்லின மெய்யின் மேல் ஏறி நிற்கும் உகரமும் முற்றியலுகரமாம்.

| | | |
|---|---|---|
| விம்மு | வாரு | அது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்துக்களின் மாத்திரை

19. **ஒரு மாத்திரை யாவது யாது?**
கண்ணிமைப் பொழுது அல்லது கைநொடிப் பொழுது ஒரு மாத்திரை.

20. **எவ்வெவ் எழுத்துக்கு எத்தனை, எத்தனை மாத்திரை?**
நெட்டெழுத்துக்கு மாத்திரை இரண்டு, குற்றெழுத்துக்கு மாத்திரை ஒன்று. மெய்யெழுத்துக்கும் ஆய்த எழுத்துக்கும் குற்றியலுகரத்துக்கும் தனித்தனி மாத்திரை அரை.

உயிர்மெய்க் குற்றெழுத்துக்கு ஏறிய உயிரினளவாகிய மாத்திரை ஒன்று, உயிர் மெய் நெட்டெழுத்துக்கு ஏறிய உயிரினளவாகிய மாத்திரை இரண்டு.

## மொழிமுதல் எழுத்துக்கள் :

21. **மொழிக்கு முதலில் நிற்கும் எழுத்துக்கள் எவை?**
பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், உயிரேறிய க், ச், த், ந், ப், ம், வ், ய், ஞ் என்னும் ஒன்பது மெய்யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் நிற்கும் எழுத்துக்களாம்.

| | | | |
|---|---|---|---|
| அணி | எழு | கரு | வயல் |
| ஆடை | ஏணி | சரி | யமன் |
| இலை | ஐயம் | தலை | ஞமலி |
| ஈரல் | ஒளி | நன்மை | |
| உரல் | ஓடு | பந்து | |
| ஊர்தி | ஔவை | மணி | |

22. **இவ்வொன்பது மெய்களுள் எத்தனை மெய்கள் பன்னிரண்டு உயிரோடும் மொழிக்கு முதல் வரும்?**
க், ச், த், ந், ப், ம், என்னும் ஆறு மெய்களும் பன்னிரண்டு உயிரோடும் மொழிக்கு முதல் வரும்.

23. **ஒழிந்த வ், ய், ஞ், என்னும் மூன்று மெய்களும் எத்தனை எத்தனை உயிரோடு மொழிக்கு முதல் வரும்?**
வகரம் எட்டு உயிரோடும், யகரம் ஆறு உயிரோடும், ஞகரம் நான்கு உயிரோடும் மொழிக்கு முதல் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வலி | யவனர் | ஞமலி |
| வாழை | யானை | ஞாலம் |
| விளி | யுகம் | ஞெகிழி |
| வீடு | யூகம் | ஞொள்கல் |
| வெளி | யோகம் | |
| வேலை | யௌவனம் | |
| வையம் | | |
| வௌவால் | | |

## மொழியிறுதி எழுத்துக்கள் :

**24. மொழிக்கு இறுதியில் நிற்கும் எழுத்துக்கள் எவை?**

எகரம் ஒழிந்த பதினோருயிர்களும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொரு மெய்களுமாகிய இருபத் திரண்டு எழுத்துக்களும் மொழிக்கிறுதியில் நிற்கும் எழுத்துக் களாம்.

| | | | |
|---|---|---|---|
| விள | சே | உரிஞ் | காய் |
| பலா | கை | மண் | வேர் |
| கிளி | நொ | வெரிந் | வேல் |
| தீ | போ | மரம் | தெவ் |
| கடு | வௌ | பொன் | யாழ் |
| பூ | | | வாள் |

## எழுத்துக்களின் சாரியை:

**25. எழுத்துக்கள் எப்படி வழங்கும்?**

மெய்யெழுத்துக்கள் அகரச் சாரியையும், உயிர்நெட்டெழுத்துக் கள் காரச்சாரியையும், உயிர்க் குற்றெழுத்துக்களும் உயிர் மெய்க் குற்றெழுத்துக்களும் கரம், காரம் என்னும் இரண்டு சாரியையும் பெற்று வழங்கும்.

| | |
|---|---|
| க | ங |
| ஆகாரம் | ஐகாரம் |
| அகரம் | அகாரம் |
| ககரம் | ககாரம் எனவும் வரும் |

எழுத்தியல் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. பதவியல்

**26. பதமாவது யாது?**
ஓரெழுத்தாலாயினும் இரண்டு முதலிய பல எழுத்துக்களாலா யினும் ஆக்கப்பட்டுப் பொருளை அறிவிப்பதாம்.

**27. அப் பதம் எத்தனை வகைப்படும்?**
பகாப்பதம், பகுபதம் என இரண்டு வகைப்படும்.

**28. பகாப்பதமாவது யாது?**
பகுக்கப்படாத இயல்பையுடைய பதமாம்.

| | |
|---|---|
| நிலம்,நீர் | - பெயர்ப் பகாப்பதம் |
| நட, வா | - வினைப் பகாப்பதம் |
| மற்று, ஏ | - இடைப் பகாப்பதம் |
| உறு, நனி | - உரிப் பகாப்பதம் |

**29. பகுபதமாவது யாது?**
பகுக்கப்படும் இயல்பையுடைய பதமாம்.

| | |
|---|---|
| பொன்னன் | - பெயர்ப் பகுபதம் |
| நடந்தான் | - தெரிநிலைவினைப் பகுபதம் |
| பெரியன் | - குறிப்பு வினைப்பகுபதம் |

பகுபதவுறுப்பு:

**30. பகுபதம் எத்தனை உறுப்புக்களினால் முடிவு பெறும்?**
பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறு உறுப்புக்களுள்ளும், பகுதி, விகுதி என்னும் இரண்டு முதலியவைகளினால் முடிவு பெறும்.

| | | |
|---|---|---|
| கூனி | - கூன் (பகுதி) | + இ (விகுதி) |
| உண்டான் | - உண் (பகுதி) | + ட் (இடைநிலை) + ஆன் (விகுதி) |
| உண்டனன் | - உண் (பகுதி) | + ட் (இடைநிலை) + அன் (சாரியை) + அன் (விகுதி) |
| பிடித்தனன் | - பிடி (பகுதி) | + த் (சந்தி) + த் (இடைநிலை) + அன் (சாரியை)+ அன் (விகுதி) |
| நடந்தனன் | - நட (பகுதி) | + த் (சந்தி) + த் (இடைநிலை) + அன் (சாரியை) + அன் (விகுதி) |

சந்தியால் வந்த தகரம் நகரமானது விகாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி:

**31. பகுதிகளாவன யாவை?**

பகுபதங்களின் முதலிலே நிற்கும் பகாப்பதங்களாம்.

**32. பெயர்ப் பகுபதங்களுக்கும் குறிப்புவினைப் பகுபதங்களுக்கும் பகுதிகள் யாவை?**

பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப் பெயர், தொழிற்பெயர் என்னும் அறுவகைப் பெயர்களுமாம்.

| | | |
|---|---|---|
| பொன்னன் | தையான் | கரியன் |
| நிலத்தன் | பல்லன் | நடையன் |

பெயர்ப் பகுபதங்களுக்கும் குறிப்புவினைப் பகுபதங்களுக்கும் உதாரணம் இவையே.

அவன், எவன், பிறன், எனப் பெயர்ப் பகுபதங்களுக்குச் சிறுபான்மை இடைச் சொற்களும் பகுதிகளாய் வரும்.

**33. தெரிநிலைவினைப் பகுபதங்களுக்குப் பகுதிகள் யாவை?**

நட, வா முதலிய வினைச் சொற்களாம்.

நட — நடந்தான், வா — வந்தான்.

சித்திரம் - சித்திரித்தான், போல் - போன்றான், சால் - சான்றான் எனத் தெரிநிலைவினைப் பகுபதங்களுக்குச் சிறுபான்மை பெயர்ச்சொல், இடைச்சொல், உரிச்சொற்களும் பகுதிகளாய் வரும்.

**34. நட, வா, முதலிய தெரிநிலைவினைப் பகுதிகள் பிறவினைப் பகுதிகளாமிடத்து எப்படி வரும்?**

சில பகுதிகள் வி, பி, து, சு என்னும் விகுதிகள் பெற்றும், சில பகுதிகள் நடுவே உள்ள மெல்லொற்று, வல்லொற்றாய்த் திரியப் பெற்றும், சில பகுதிகள் நடுவே ஒற்றிரட்டப் பெற்றும் பிறவினைப் பகுதிகளாய் வரும்.

| | | |
|---|---|---|
| செய் | - செய்வி | - செய்வித்தான் |
| நட | - நடப்பி | - நடப்பித்தான் |
| நட | - நடத்து | - நடத்தினான் |
| பாய் | - பாய்ச்சு | - பாய்ச்சினான் |
| உறங்கு | - உறக்கு | - உறக்கினான் |
| உருகு | - உருக்கு | - உருக்கினான். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகுதி:

**35. விகுதிகளாவன யாவை?**

பகுபதங்களின் இறுதியில் நிற்கும் இடைப் பகாப்பதங்களாம்.

**36. பெயர் விகுதிகள் எவை?**

அன், ஆன், ன், அள், ஆள், இ, ள், அர், ஆர், மார், கள், ர், து, அ, வை என்னும் பதினைந்தும் பிறவுமாம்.

| | | |
|---|---|---|
| குழையன் | பொன்னி | கோக்கள் |
| வானத்தான் | பிறள் | பிறர் |
| பிறன் | குழையர் | அது |
| குழையள் | வானத்தார் | குழையன் |
| வானத்தாள் | தேவிமார் | அவை |

**37. தொழிற்பெயர் விகுதிகள் எவை?**

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, மை, து என்னும் பதினேழும் பிறவுமாம்.

| | | |
|---|---|---|
| நடத்தல் | போக்கு | விக்குள் |
| ஆடல் | நடப்பு | சாக்காடு |
| வாட்டம் | வரவு | கோட்பாடு |
| கொலை | மறதி | நடவாமை |
| நடக்கை | புணர்ச்சி | பாய்த்து |
| பார்வை | புலவி | |

**38. பண்புப்பெயர் விகுதிகள் எவை?**

மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர் என்னும் பத்தும் பிறவுமாம்.

| | | |
|---|---|---|
| நன்மை | மழவு | நலம் |
| தொல்லை | நன்கு | நன்னர் |
| மாட்சி | நன்றி | |
| மாண்பு | நன்று | |

**39. வினைமுற்று விகுதிகள் எவை?**

1. அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, று, அ, ஆ, ஏன், அம், ஏம், ஓம், ஐ, ஆய், ஈர், உம், மின், ஏல், க என்னும் இருபத்தொன்றும் பிறவுந் தெரிநிலை வினைமுற்று விகுதிகளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நடந்தனன் | போயிற்று | நடந்தனை |
| நடந்தான் | நடந்தன | நடந்தாய் |
| நடந்தனள் | நடவா | நடந்தீர் |
| நடந்தாள் | நடந்தேன் | நடவும் |
| நடந்தனர் | நடப்பம் | நடமின் |
| நடந்தார் | நடப்பேம் | நடவேல் |
| நடந்தது | நடப்போம் | நடக்க |

2. இவ்விருபத்தொரு விகுதிகளுள் ஆ, உம், மின், ஏல், க என்னும் ஐந்தும் ஒழிந்த பதினாறும் குறிப்பு வினைமுற்றுக் களுக்கும் விகுதிகளாம்.

| | | | |
|---|---|---|---|
| கரியன் | கரியர் | கரியன | கரியோம் |
| கரியான் | கரியார் | கரியேன் | கரியை |
| கரியள் | கரிது | கரியம் | கரியாய் |
| கரியாள் | குழையிற்று | கரியேம் | கரியீர் |

## 40. பெயரெச்ச விகுதிகள் எவை?

1. அ, உம் என்னும் இரண்டுந் தெரிநிலை வினைப் பெயரெச்ச விகுதிகளாம்.

   செய்த    செய்கின்ற    செய்யும்

2. குறிப்புவினைப் பெயரெச்சத்திற்கு இவைகளுள் அ ஒன்றே விகுதியாம்.

   கரிய

## 41. வினையெச்ச விகுதிகள் எவை?

1. உ, இ, ய், அ, கு, இன், கால், ஆல், மல், மே என்னும் பத்துந் தெரிநிலை வினையெச்ச விகுதிகளாம்.

| | | |
|---|---|---|
| நடந்து | உணற்கு | உண்ணாமல் |
| ஓடி | உண்ணின் | உண்ணாமே |
| போய் | உண்டால் | |
| உண்ண | உண்டக்கால் | |

2. குறிப்பு வினையெச்சத்துக்கு, இவ்விகுதிகளுள், அ, ஆல், கால், மல், மே என்பவைகளோடு து, றி என்பவைகளும் விகுதிகளாம்

| | | |
|---|---|---|
| மெல்ல | அல்லாமல் | அல்லது |
| அல்லால் | அல்லாமே | அன்றி |
| அல்லாக்கால் | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**42. இதுவரையுங் கூறிய விகுதிகளேயன்றிப் பிற விகுதிகளும் உண்டா?**

உண்டு. அவை வருமாறு.

1. இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும், வினை முதற் பொருளையுஞ் செயப்படு பொருளையுங் கருவிப் பொருளையும் உணர்த்தும்.

| | | |
|---|---|---|
| அலரி | பறவை | எச்சம் |
| ஊருணி | தொடை | தேட்டம் |
| மண்வெட்டி | பார்வை | நோக்கம். |

2. விடு, ஒழி விகுதிகள் துணிவுப் பொருளுணர்த்தும்.
   வந்துவிட்டான், கெட்டொழிந்தான்.

3. கொள் விகுதி தற்செயலுணர்த்தும்.
   அடித்துக் கொண்டான்.

4. படு, உண், விகுதிகள் செயப்பாட்டு வினைப் பொருள் உணர்த்தும்.
   கட்டப்பட்டான், கட்டுண்டான்.

5. மை விகுதி தன்மைப் பொருளுணர்த்தும்.
   பொன்மை, ஆண்மை

6. இரு, இடு என்பன தமக்கென வேறு பொருளின்றிப் பகுதிப் பொருள் விகுதிகளாய் வரும்.
   எழுந்திருக்கின்றான் உரைத்திடுகின்றான்.

## இடைநிலை:

**43. இடைநிலை எத்தனை வகைப்படும்?**

பெயரிடைநிலை, வினையிடைநிலை என இரண்டு வகைப்படும்.

**44. பெயரிடைநிலைகள் எவை?**

பெயர்ப் பகுபதத்திலே பகுதி விகுதிகளை வேறு பிரித்துப் பார்க்கும்போது, அவ்விண்டுக்கும் இடை நிற்பவையெல்லாம் பெயரிடைநிலைகளாம்.

| | |
|---|---|
| அறிஞன் | - ஞ் இடைநிலை |
| ஓதுவான் | - வ் இடைநிலை |
| வலைச்சி | - ச் இடைநிலை |
| வண்ணாத்தி | - த் இடைநிலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**45. வினையிடைநிலைகள் எத்தனை வகைப்படும்?**
இறந்தகால இடைநிலை, நிகழ்கால இடைநிலை, எதிர்கால இடைநிலை என மூன்று வகைப்படும்.

**46. இறந்தகால இடைநிலைகள் எவை?**
த், ட், ற், இன் என்னும் நான்குமாம்.
செய்தான், உண்டான், நின்றான், ஓடினான்.

**47. நிகழ்கால இடைநிலைகள் எவை?**
ஆநின்று, கின்று, கிறு, என்னும் மூன்றுமாம்.
நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான்.

**48. எதிர்கால இடைநிலைகள் எவை?**
ப், வ் என்னும் இரண்டுமாம்.
நடப்பான், செய்வான்.

**49. எதிர்மறை இடைநிலைகள் எவை?**
இல், அல், ஆ என்னும் மூன்றுமாம். இவற்றுள் ஆகார இடைநிலை, வருமெழுத்து மெய்யாயிற் கெடாது, உயிராயிற் கெட்டும் வரும்.
நடத்தினான், நடக்கின்றிலன், உண்ணலன், உண்ணாதான், உண்ணான், உண்ணாதான் என்பதிலே தகர மெய் எழுத்துப்பேறு.

விகுதி காலங் காட்டல்:

**50. மேற்சொல்லிய வினை இடைநிலைகளை ஏலாது விகுதியினாலே காலம் காட்டும் வினைகளும் உண்டோ?**
சில உண்டு. அவை முன்னிலையேவல் வினைமுற்றுக்களும், வியங்கோள் வினைமுற்றும் செய்யுமென் வினைமுற்றும், செய்யுமென் வாய்ப்பாட்டுப் பெயரெச்சமும், இகரயகர ஈற்றுச் செய்தென் வாய்ப்பாட்டு வினையெச்சமும், செய செயின் என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சங்களுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரியை:

**51. சாரியைகளாவன யாவை?**

அன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், ஆம், அ, ஆ, உ, எ, ஏ, ஐ, கு, து, ன் என்னும் பதினாறும் பிறவுமாம்.

| | | |
|---|---|---|
| நடந்தனன் | புளியங்காய் | இரட்டைப்பிள்ளை |
| பசுவினெய் | மண்ணாங்கட்டி | உண்குவான் |
| வளையல் | நடந்தது | செய்துகொண்டான் |
| பலவற்றை | இல்லாப்பொருள் | ஆன் |
| பதிற்றுப்பத்து | உண்ணுவான் | |
| அகத்தன் | ஒன்றேகால் | |

சந்தி:

**52. சந்திகளாவன யாவை?**

சந்திகளாவன புணரியலிற் சொல்லப்படுவனவாகிய தோன்றல் முதலிய புணர்ச்சி விகாரம் மூன்றுமாம்.

விகாரம்:

**53. விகாரங்களாவன யாவை?**

வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல், முதற்குறை இடைக்குறை கடைக்குறை என்னுஞ் செய்யுள் விகாரம் ஒன்பதுமாம்.

பதவியல் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. புணரியல்

**54. புணர்ச்சியாவது யாது?**

நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடப் புணர்வதாம்.

**55. அப்புணர்ச்சி எத்தனை வகைப்படும்?**

வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இரண்டு வகைப்படும்.

**56. வேற்றுமைப் புணர்ச்சியாவது யாது?**

ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறு உருபுகளும் இடையில் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரச் சொற்கள் புணர்வதாம்.

| வேற்றுமைத் தொகை | உருபு | வேற்றுமை விரி |
|---|---|---|
| நீர் குடித்தான் | (ஐ) | நீரைக் குடித்தான் |
| கல்லெறிந்தான் | (ஆல்) | கல்லா லெறிந்தான் |
| கொற்றன் மகன் | (கு) | கொற்றனுக்கு மகன் |
| மலை வீழருவி | (இன்) | மலையின் வீழருவி |
| சாத்தன் கை | (அது) | சாத்தனது கை |
| மலை நெல் | (கண்) | மலையின் கண் நெல் |

**57. அல்வழிப் புணர்ச்சியாவது யாது?**

1. கொல்யானை - வினைத்தொகை
2. கருங்குதிரை - பண்புத்தொகை
3. சாரைப்பாம்பு - இருபெயரொட்டுப் பண்புத்தொகை
4. மதிமுகம் - உவமைத்தொகை
5. இராப்பகல் - உம்மைத்தொகை
6. பொற்றொடி - அன்மொழித்தொகை
7. சாத்தன் வந்தான் - எழுவாய்த் தொடர்
8. சாத்தா வா - விழித்தொடர்
9. வந்தான் சாத்தன் - தெரிநிலைவினைமுற்றுத் தொடர்
10. பொன்ன னிவன் - குறிப்புவினைமுற்றுத் தொடர்
11. வந்த சாத்தன் - பெயரெச்சத்தொடர்
12. வந்து போனான் - வினையெச்சத்தொடர்
13. மற்றொன்று - இடைச்சொற்றொடர்
14. நனி பேதை - உரிச்சொற்றொடர்
15. பாம்பு பாம்பு - அடுக்குத்தொடர்



2
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**58. மொழிகள் எப்படிப் புணரும்?**

இயல்பாகவேனும் விகாரமாகவேனும் புணரும்.

**59. இயல்புப் புணர்ச்சியாவது யாது?**

நிலைமொழியும் வருமொழியும் விகாரமின்றிப் புணர்வதாம். பொன்மலை, ஒளிமணி

**60. விகாரப் புணர்ச்சியாவது யாது?**

நிலைமொழியேனும், வருமொழியேனும் இவ்விரு மொழியுமேனும் தோன்றல், திரிதல், கெடுதல், என்னும் மூன்று விகாரங்களுள் ஒன்றை யாயினும் பலவற்றை யாயினும் பெற்றுப் புணர்வதாம்.

| | |
|---|---|
| வாழைப்பழம் | - தோன்றல் |
| மட்குடம் | - திரிதல் |
| மரவேர் | - கெடுதல் |
| நிலப்பனை | - கெடுதல், தோன்றல் |
| பனங்காய் | - கெடுதல், தோன்றல், திரிதல். |

## மெய்க்குமுன் உயிர்புணர்தல்:

**61. மெய்யீற்றின் முன் உயிர் வந்தால், எப்படிப் புணரும்?**

1. மெய்யீற்றின் முன் உயிர் வந்தால், வந்த உயிர் அந்த மெய்யின் மேல் ஏறும்.
   ஆண் + அழகு = ஆணழகு.
2. தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த மெய்யீற்றின் முன் உயிர் வந்தால் அந்த மெய் இரட்டிக்கும்.
   கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்.

## உயிர் முன் உயிர் புணர்தல்:

**62. உயிரீற்றின் முன் உயிர் வந்தால் எப்படிப் புணரும்?**

1. இ, ஈ, ஐ என்னும் மூன்று உயிரீற்றின் முன்னும் உயிர் வந்தால் இடையில் யகரம் உடம்படுமெய்யாக வரும்.
   மணி + அழகு = மணியழகு
   தீ + எரியும் = தீ யெரியும்
   பனை + ஓலை = பனையோலை
2. ஏகார உயிரீற்றின் முன் உயிர் வந்தால், இடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யகரமாயினும், வகரமாயினும் உடம்படுமெய்யாக வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அவனே | + | அழகன் | = | அவனேயழகன் |
| சே | + | ஏறி | = | சேவேறி |

3. அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ ஔ என்னும் ஏழு உயிரீற்றின் முன்னும் உயிர் வந்தால் இடையில் வகரம் உடம்படு மெய்யாக வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பல | + | அணி | = | பலவணி |
| பலா | + | இலை | = | பலாவிலை |
| திரு | + | அடி | = | திருவடி |
| பூ | + | அரும்பு | = | பூவரும்பு |
| நொ | + | அழகா | = | நொவ்வழகா |
| கோ | + | அழகு | = | கோவழகு |
| கௌ | + | அழகு | = | கௌவழகு |

## சுட்டு முன்னும் வினா முன்னும் நாற்கணமும் புணர்தல்.

**63. மூன்று சுட்டு முன்னும் எகர வினா முன்னும் நாற்கணமும் வந்தால் எப்படிப் புணரும்?**

யகரம் ஒழிந்த மெய்கள் வந்தால், வந்த எழுத்து மிகும். யகரமும் உயிரும் வந்தால் இடையில் வகரந் தோன்றும்.

| | |
|---|---|
| அக்காலம் | எக்காலம் |
| அம்மலை | எம்மலை |
| அவ்வழி | எவ்வழி |
| அவ்யானை | எவ்யானை |
| அவ்வுயிர் | எவ்வுயிர் |

## குற்றுகர முன்னுஞ் சில முற்றுகர முன்னும் உயிரும் யகரமும் புணர்தல்.

**64. குற்றியலுகர ஈற்றின் முன்னும் சில முற்றியலுகர ஈற்றின் முன்னும் உயிரும் யகரமும் வந்தால் எப்படிப் புணரும்?**

குற்றியலுகரம் உயிர் வந்தால், தானேறி நின்ற மெய்யை விட்டுக் கெடும்: யகரம் வந்தால் இகரமாகத் திரியும். சில முற்றியலுகரமும் இவ்விரு விதியும் பெறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆடு | + | அரிது | = | ஆடரிது |
| ஆடு | + | யாது | = | ஆடியாது |
| கதவு | + | அரிது | = | கதவரிது |
| கதவு | + | யாது | = | கதவியாது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர் முன்னும் ய; ர; ழ மெய் முன்னும் வல்லினம் புணர்தல்:

**65. உயிரீற்றின் முன்னும் ய, ர, ழ மெய்யீற்றின் முன்னும் வல்லினம் வந்தால் எப்படிப் புணரும்?**

உயிரீற்றின் முன்னும் ய, ர, ழ மெய்யீற்றின் முன்னும் வரும் வல்லினம் பெரும்பாலும் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| இந்த | + | சத்தம் | = | இந்தச்சத்தம் |
| பலா | + | காய் | = | பலாக்காய் |
| வாங்கி | + | தருவேன் | = | வாங்கித்தருவேன் |
| சாரை | + | பாம்பு | = | சாரைப்பாம்பு |
| பொய் | + | செல்வம் | = | பொய்ச்செல்வம் |
| தேர் | + | கால் | = | தேர்க்கால் |
| தமிழ் | + | கல்வி | = | தமிழ்க்கல்வி |

**66. உயிரீற்றின் முன்னும் ய, ர, ழ மெய்யீற்றின் முன்னும் வல்லினம் எவ்விடங்களில் இயல்பாம்?**

1. உயிரீற்று வினாப்பெயருக்கும், அகரவீற்றுப் பெயரெச்சத்துக்கும், அகரவீற்று அஃறிணைப் பன்மைப் பெயருக்கும், நீ என்னும் பொதுப் பெயருக்கும், அது, இது, உது, என்னும் சுட்டுப் பெயர்களுக்கும் எது என்னும் வினாப் பெயருக்கும், ஒரு, இரு, அறு, எழு என்னும் விகார எண்ணுப் பெயர்களுக்கும், மூன்றாம் ஆறாம் வேற்றுமை யுருபுகளுக்கும் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

| எடுத்துக்காட்டு | வகை |
|---|---|
| அவனோ கொடுத்தான்<br>நானோ தந்தேன் | வினாப்பெயர் |
| உண்ட குதிரை<br>கரிய சாத்தன் | பெயரெச்சம் |
| பல குதிரை<br>சில குதிரை | அஃறிணைப் பன்மைப் பெயர் |
| நீ கண்டாய்<br>நீ போனாய் | பொதுப்பெயர் |
| அது குறிது<br>இது தந்தான் | சுட்டுப்பெயர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது பெரிது
எது பெற்றான் } வினாப்பெயர்

ஒரு வகை
இரு செவி
ஆறு குணம்
ஏழு புவி } விகார எண்ணும் பெயர்

சாத்தனொடு சென்றான் - மூன்றனுருபு
எனது தலை - ஆறனுருபு

2. உயிரையும் ய, ர, ழ மெய்யையும் இறுதியாக உடைய விளிப்பெயருக்கும், உயிர்திணைப் பெயர், பொதுப் பெயர் களுக்கும், வினைமுற்றுக்கும் வினைத்தொகைக்கும் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

சாத்தா கேள்
தம்பீ தா
நங்காய் பார்
பெரியீர் போமின்
குறும்பூழ் போ
நம்பி குறியன் } விளிப்பெயர்

நம்பிக்கை
விடலை சிறியன்
சேய் பெரியன்
அவர் தலை } உயர்திணைப் பெயர்

சாத்தி குறியள்
சாத்தி குறிது
சாத்தி கால்
தாய் கொடியள்
தாய் கொடிது
தாய் கை } பொதுப் பெயர்

உண்டன குதிரைகள்
உண்ணா குதிரைகள்
வந்தனை சாத்தா
வந்தாய் பூதா
உண்டார் புலவர்
வாழ் பூதா } வினைமுற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிசுடர்
அடுகளிறு
வனைகலம்
செய்கடன்
குளிர்காற்று
வீழ்புனல் } வினைத்தொகை

ழகர, மெய் உயர்திணைப்பெயர், பொதுப் பெயர்களுக்கு ஈறாகாது. ரகரமெய் பொதுப்பெயர்க்கு ஈறாகாது.

3. இகர ஐகாரங்களையும் ய, ர, ழ மெய்களையும் இறுதியாக வுடைய அஃறிணைப் பெயர்களுக்கு முன் வரும் வல்லினம் எழுவாய்த் தொடரிலும் உம்மைத் தொகையிலும் இயல்பாம்.

பருத்தி குறிது
யானை பெரிது
நாய் மீது
வேர் சிறிது
யாழ் பெரிது } எழுவாய்த் தொடர்

பரணி கார்த்திகை
யானை குதிரை
பேய்பூதம்
நீர்கனல்
இகழ் புகழ் } உம்மைத்தொகை

4. என்ன என்னும் வினாவுக்கும், வினையை அடுத்த படி என்னுஞ் சொல்லுக்கும், தனை என்னும் சொல்லுக்கும் முன் வரும் வல்லினம் இயல்பாம்.
என்ன செய்தி?
வரும்படி சொன்னான்
எத்தனை பணம்?

குற்றியலுகர ஈறு:

**67. அறுவகைக் குற்றியலுகரங்களுள்ளும் எவ்வெவைகளின் முன் வரும் வல்லினம் எவ்வெவ் விடங்களில் இயல்பாம்?**

1. வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன்வரும் வல்லினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலையேவல் வினைமுற்றுத் தொடரிலும் வினைத் தொகையிலும் இயல்பாம்.
ஈட்டு, கொற்றா, நாட்டு, புகழ்

2. மென்றொடர்க் குற்றியலுகரத்தின் முன்வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாம்
குரங்கு கடிது, நடந்து சென்றான்.

3. நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், இடைத் தொடர் என்னும் இந்நான்கு தொடர்க் குற்றியலுகரங்களின் முன்னும் வரும் வல்லினம் இரு வழியிலும் இயல்பாம்.

| **அல்வழி** | **வேற்றுமை** |
|---|---|
| நாகு கடிது | நாகு கால் |
| எ்.கு கொடிது | எ்.கு கூர்மை |
| வரகு சிறிது | வரகு சோறு |
| தெள்கு பெரிது | தெள்கு பெருமை |

**68. டுகர றுகர வீற்று நெடிற்றொடர்க் குற்றியலுகர மொழிகளிலும், உயிர்த்தொடர்க் குற்றியலுகர மொழிகளிலும், ஈற்றுகரமேறிய டகர றகர மெய்கள் நாற்கணமும் வரப் பெரும்பாலும் எவ்வழிகளில் இரட்டித்து வரும்?**
அவ்விரண்டு மெய்களும் பெரும்பாலும் வேற்றுமையிலும், அல்வழியிற் பண்புத்தொகையிலும் இரட்டித்து வரும்.

| **வேற்றுமை** | **பண்புத்தொகை** |
|---|---|
| மாட்டடி | வரட்டாடு |
| ஆற்றுப்பெருக்கு | வெளிற்றுப்பனை |

எருத்துமாடு எனச் சிறுபான்மை பிறவொற் றிரட்டுதலுமுண்டு.

**69. மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள்ளே சில நாற்கணமும் வந்து புணர வன்றொடராய்த் திரிதலும் உண்டோ?**
வேற்றுமையிலும், அல்வழியிலே பண்புத்தொகையிலும், உவமைத்தொகையிலும் சில மென்றொடர்க் குற்றியலுகர மொழிகள் வன்றொடராய்த் திரிந்து வருதலும் உண்டு.

| | | |
|---|---|---|
| இரும்பு + சட்டி | = இருப்புச்சட்டி | |
| கன்று + ஆ | = கற்றா | - வேற்றுமை |
| என்பு + உடம்பு | = எற்புடம்பு | - பண்புத்தொகை |
| இரும்பு + நெஞ்சம் | = இரும்பு நெஞ்சம் | - உவமைத்தொகை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**70. சில மென்றொடர்க் குற்றியலுகர மொழிகள் ஈற்றில் ஐகாரச் சாரியை பெற்று வருதலும் உண்டோ?**

சில மென்றொடர் ஐகாரச் சாரியை பெற்று வருதலும் உண்டு.

இன்று + நாள் = இற்றைநாள் - பண்புத்தொகை

அன்று + கூலி = அற்றைக்கூலி - வேற்றுமை

நேற்றைத்தினம், நேற்றைக் கூலி என வன்றொடர் ஐகாரச் சாரியை பெறுதலும் உண்டு.

## மெல்லின மிகுதல்:

**71. வல்லின மன்றி மெல்லினம் எவ்விடத்தும் மிகுதல் இல்லையா?**

தனிக் குற்றெழுத்தைச் சார்ந்த யகரத்தின் முன்னும், தனி ஐகாரத்தில் முன்னும் வரும் மெல்லினம் மிகும்.

மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்

செய் + நன்றி = செய்ந்நன்றி

கை + மாறு = கைம்மாறு

## ணகர னகர ஈறு:

**72. ணகரத்தின் முன்னும், னகரத்தின் முன்னும் வல்லினம் வந்தால், எப்படிப் புணரும்?**

வேற்றுமையில் ணகரம் டகரமாகவும் னகரம் றகரமாகவும் திரியும். அல்வழியில் இயல்பாம்

**வேற்றுமை**

மண் + குடம் = மட்குடம்

பொன் + குடம் = பொற்குடம்

**அல்வழி**

மண் + பெரிது = மண்பெரிது

பொன் + சிறிது = பொன்சிறிது

**73. ணகர னகரங்கள் எவ்விடத்துங் கெடுதல் இல்லையா?**

தனிக் குற்றெழுத்தைச் சாராத ணகர னகரங்கள் வருமொழி முதலில் உள்ள நகரந் திரிந்து பின் கெடும்.

**வேற்றுமை**

தூண் + நன்மை = தூணன்மை

பசும்பொன் + நன்மை = பசும்பொனன்மை

**அல்வழி**

தூண் + நன்று = தூணன்று

பசும்பொன் + நன்று = பசும்பொனன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லகர ளகர ஈறு:

**74. லகர ளகரங்களில் முன் வல்லினம் வந்தால் எப்படிப் புணரும்?**

வேற்றுமையில் லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவுந் திரியும். அவ்வழியில் இயல்பாம்.

**வேற்றுமை**

கல் + சட்டி = கற்சட்டி

புள் + சிறை = புட்சிறை

**அல்வழி**

வேல் + கொடிது = வேல்கொடிது

வாள் + சிறிது = வாள்சிறிது

**75. லகர ளகரங்களின் முன் மெல்லினம் வந்தால் எப்படிப் புணரும்?**

இரு வழியிலும் லகரம் னகரமாகவும், ளகரம் ணகரமாகவும் திரியும்.

**வேற்றுமை**

கல் + நீட்சி = கன்னீட்சி

எள் + நெய் = எண்ணெய்

**அல்வழி**

கல் + மறைந்தது = கன்மறைந்தது

என் + நிறைந்தது = எண்ணிறைந்தது.

**76. லகர ளகரங்கள் எவ்விடத்தும் கெடுதல் இல்லையா?**

தனிக்குற்றெழுத்தைச் சாராத லகர ளகரங்கள் அல்வழியில் வந்த தகரந் திரிந்த பின்னும், இருவழியிலும் வந்த நகரந் திரிந்த பின்னும் கெடும்.

**அல்வழி**

தோன்றல் + தீயன் = தோன்றறீயன்

வேள் + தீயன் = வேடீயன்

**வேற்றுமை**

தோன்றல் + நன்மை = தோன்றனன்மை

வேள் + நன்மை = வேணன்மை

**அல்வழி**

தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன்

வேள் + நல்லன் = வேணல்லன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகர நகரந் திரிதல்:

**77. னகர லகரங்களின் முன் வருந் தகர நகரங்கள் எவ்வாறாம்?**

தகரம் றகரமாகவும், நகரம் னகரமாகவும் திரியும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பொன் | + | தீது | = | பொன்றீது |
| கல் | + | தீது | = | கற்றீது |
| டிபான் | + | நன்மை | = | பொன்னன்மை |
| கல் | + | நன்மை | = | கன்னன்மை |

**78. ணகர ளகரங்களின் முன் வருந் தகர நகரங்கள் எவ்வாறாகும்?**

தகரம் டகரமாகவும், நகரம் ணகரமாகவும் திரியும்.

| | | | | |
|---|---|---|---|---|
| மண் | + | தீது | = | மண்டீது |
| முள் | + | தீது | = | முட்டீது |
| கவண் | + | நெடிது | = | கவணெடிது |
| அருள் | + | நலம் | = | அருணலம் |

பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களின் ஈற்று ண ன ல ள:

**79. பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களின் ஈற்று ணகர னகர லகர ளகரங்களும், வல்லினம் வந்தால், வேற்றுமை யிலே திரிந்தே வருமா?**

திரியாது இயல்பாம்.

| **பொதுப்பெயர்** | **உயர்திணைப் பெயர்** |
|---|---|
| ஆண் கை | அவன் குணம் |
| சாத்தன் செவி | தோன்றல் செவி |
| தூங்கல் கை | அவள் கை |

மகர ஈறு:

**80. மகரத்தின் முன் நாற்கணமும் வந்தால் எப்படிப் புணரும்?**

1. வல்லினம் வந்தால், அல்வழியில் வரும் எழுத்துக்கு இன வெழுத்தாகத் திரியும். வேற்றுமையில் மகரங் கெட வரும் வல்லினம் மிகும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மரம் | + | குறிது | = | மரங்குறிது | – | அல்வழி |
| மரம் | + | கொம்பு | = | மரக்கொம்பு | – | வேற்றுமை |

2. மெல்லினம் வந்தால், இருவழியிலும் கெடும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மரம் | + | நீண்டது | = | மரநீண்டது | – | அல்வழி |
| மரம் | + | நார் | = | மரநார் | – | வேற்றுமை |

3. மகரமும், உயிரும் இடையினமும் வந்தால், வேற்றுமை யிலே கெடும். அல்வழியிலே பெரும்பாலும் கெடாது நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேற்றுமை**

மரம் + அடி = மரவடி

மரம் + வேர் = மரவேர்

**அல்வழி**

மரம் + அரிது = மரமரிது

மரம் + வலிது = மரம்வலிது

**81. தனிக் குற்றெழுத்தைச் சார்ந்த மகரமெய் நாற்கணமும் வந்தால் இரு வழியிலும் எவ்வாறாகும்?**

கெடாது நிற்கும். க, ச, த வந்தால், இன மெல்லெழுத்தாகவும், ஞ, த வந்தால் அவ்வந்த எழுத்தாகவுந் திரியும்.

உம் + அருள் = உம்மருள்

உம் + பெருமை = உம்பெருமை

நம் + வளம் = நம்வளம்

நம் + குணம் = நங்குணம்

எம் + நூல் = எந்நூல்

## வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை

**82. வேற்றுமைப் புணர்ச்சிகளுள் மேற்கூறிய விதி பெறாது வேறுபட்டு வருவனவும் உளவோ?**

வேற்றுமைப் புணர்ச்சியில் விகாரமாக வேண்டியவை இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வருமொழி வினைச்சொல்லாய விடத்து இயல்பாக வரும்.

| | |
|---|---|
| புளி தின்றான் | மண் கொணர்ந்தான் |
| பனை தறித்தான் | பொன் கொடுத்தான் |
| பொய் சொன்னான் | நூல் கற்றான் |
| தமிழ் படித்தான் | அருள் பெற்றான் |

**புணரியல் முற்றிற்று.**

**எழுத்ததிகாரம் முற்றுப்பெற்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II. சொல்லதிகாரம்

## 1. பெயரியல்

**83. சொல்லாவது யாது?**
எழுத்துக்களால் ஆக்கப்பட்டு இருதிணையாகிய ஐம்பாற் பொருளையும் மூவிடத்தைப் பற்றி விளக்குவதாகும்.

### இருதிணை

**84. இருதிணை யென்பவை யாவை?**
உயர்திணையும், அஃறிணையுமாம்.

**85. உயிர்திணை யென்பவை யாவை?**
மனிதர், தேவர், நரகர், என்னும் மூவகைச் சாதிப் பொருளுமாம்.

**86. அஃறிணை யென்பவை யாவை?**
மிருகம், பறவை, முதலிய உயிருள்ள சாதிப் பொருள்களும் நிலம், நீர் முதலிய உயிரில்லாத சாதிப் பொருள்களுமாம்.

### ஐம்பால்

**87. ஐம்பா லென்பவை யாவை?**
ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பவைகளாகும்.
உயர்திணைக்கு ஆண்பால், பெண்பால், பலர்பால், இம்மூன்றும் உரியன,
அஃறிணைக்கு ஒன்றன்பால், பலவின்பால் இவ்விரண்டும் உரியன.
ஆண்பால் பெண்பால், ஒன்றன்பால், இம்மூன்றும் ஒருமை எனப்படும்.
பலர்பால், பலவின்பால் இவ்விரண்டும் பன்மை எனப்படும்.

| | | |
|---|---|---|
| அவன் வந்தான் | - | உயர்திணை ஆண்பால் |
| அவள் வந்தாள் | - | உயர்திணைப் பெண்பால் |
| அவர் வந்தார் | - | உயர்திணைப் பலர்பால் |
| அது வந்தது | - | அஃறிணை ஒன்றன்பால் |
| அவை வந்தன | - | அஃறிணைப் பலவின்பால் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூவிடம்:

**88. மூவிட மென்பவை யாவை?**
தன்மை, முன்னிலை, படர்க்கை என்பவைகளாம்.
நான் வந்தேன் - தன்மை
நீ வந்தாய் - முன்னிலை
அவன் வந்தான் - படர்க்கை

## சொற்களின் வகை:

**89. சொற்கள் எத்தனை வகைப்படும்?**
பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

**90. பெயர்ச் சொல்லாவது யாது?**
ஒரு பொருளினது பெயராய் வழங்குஞ் சொல்லாம்.
மனிதன், வீடு, நன்மை

**91. பெயர்ச் சொல் எத்தனை வகைப்படும்?**
இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என இரண்டு வகைப்படும்.

**92. இடுகுறிப் பெயராவது யாது?**
ஒரு காரணமும் பற்றாது பொருளை அறிவித்து நிற்கும் பெயராம்.
மரம், மலை, கடல், சோறு

**93. காரணப் பெயராவது யாது?**
யாதேனும் ஒரு காரணம் பற்றிப் பொருளை அறிவித்து நிற்கும் பெயராம்.
பறவை, அணி, பொன்னன், கணக்கன்

## தன்மைப் பெயர்:

**94. தன்மைப் பெயர்கள் எவை?**
நான், யான், என்பவை தன்மை யொருமைப் பெயர்கள்.
நாம், யாம், நாங்கள், யாங்கள் என்பவை தன்மைப் பன்மைப் பெயர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னிலைப் பெயர்:

**95. முன்னிலைப் பெயர்கள் எவை?**
நீ என்பது முன்னிலை யொருமைப் பெயர், நீர், நீங்கள் என்பவை முன்னிலைப் பன்மைப் பெயர்கள்.

## படர்க்கைப் பெயர்:

**96. படர்க்கைப் பெயர்கள் எவை?**
மேலே சொல்லப்பட்ட தன்மை, முன்னிலைப் பெயர்களல்லாத மற்ற எல்லாப் பெயர்களுமாம்.

அவன் - உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கைப் பெயர்.
அவள் - உயர்திணை பெண்பால் ஒருமைப் படர்க்கைப் பெயர்.
அவர் - உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப் பெயர்.
அது - அ∴றிணை யொன்றன்பாற் படர்க்கைப் பெயர்
அவை - அ∴றிணைப் பலவின்பாற் படர்க்கைப் பெயர்.

## ஆகுபெயர்:

**97. ஆகுபெயராவது யாது?**
ஒரு பொருளின் இயற்பெயரால் அப் பொருளோடு சம்பந்த முடைய பிறிதொரு பொருளைத் தொன்றுதொட்டு வழங்குவது ஆகுபெயராம். அவ்வாகுபெயர் பதின்மூன்று வகைப்படும் அவையாவன:

பொருளாகுபெயர் - தாமரை போலுமுகம்.
இடவாகுபெயர் - ஊர் அடங்கிற்று.
காலவாகுபெயர் - கார் அறுத்தது.
சினையாகுபெயர் - வெற்றிலை நட்டான்
குணவாகுபெயர் - வெள்ளை வந்தது.
தொழிலாகுபெயர் - வற்றல் உண்டான்
அளவையாகுபெயர் - காலாலே நடந்தான்.
சொல்லாகுபெயர் - இதற்குரை சொல்லு
தானியாகுபெயர் - விளக்கு முறிந்தது.
கருவியாகுபெயர் - திருவாசகம் ஓதினான்
காரியவாகுபெயர் - இந்நூல் அலங்காரம்.
கருத்தாவாகுபெயர் - திருவள்ளுவர் படித்தான்
உவமையாகுபெயர் - பாவை வந்தாள்.

## வேற்றுமை:

**98. வேற்றுமை யாவது யாது?**
தன்னை யேற்ற பெயரினது பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**99. அவ்வேற்றுமை எத்தனை வகைப்படும்?**
முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டு வகைப்படும். இவைகளுள் முதல் வேற்றுமை எழுவாய் எனவும், பெயர் வேற்றுமை எனவும் பெயர் பெறும்.

**100. எழுவாய் வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை?**
எழுவாய் வேற்றுமைக்கு உருபு திரிபில்லாத பெயராம். பொருள் வினை முதலாம்.
சாத்தன் வந்தான்.

**101. இரண்டாம் வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை?**
இரண்டாம் வேற்றுமைக்கு உருபு ஐ என்பதாம் பொருள் செயப்படு பொருளாம்.
குடத்தை வனைந்தான்.

**102. மூன்றாம் வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை?**
மூன்றாம் வேற்றுமைக்கு உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பதாம். ஆல், ஆன் என்னும் உருபுகளுக்குப் பொருள் கருவியும் கருத்தாவுமாம். ஒடு, ஓடு என்னும் உருபுகளுக்குப் பொருள் உடனிகழ்ச்சிப் பொருளாம்.

வாளால் வெட்டினான்.
சாத்தனால் வெட்டினான்.
மகனோடு தந்தை வந்தான்.

ஆலுருபு நிற்றற்குரிய இடத்து கொண்டு என்பதும், ஓடுருபு நிற்றற்குரிய இடத்து உடன் என்பதுஞ் சொல்லுருபாக வரும்.
வாள் கொண்டு வெட்டினான்.
தந்தையுடன் மைந்தன் வந்தான்.

**103. நான்காம் வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை?**
நான்காம் வேற்றுமைக்கு உருபு கு என்பதாம். பொருள் கோடற் பொருளாம்.
சாத்தற்குக் கொடுத்தான்.

**104. ஐந்தாம் வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை?**
ஐந்தாம் வேற்றுமைக்கு உருபு இல், இன் என்பவைகளாம். பொருள் நீக்கப் பொருளும், எல்லைப் பொருளும், ஏதுப் பொருளுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரின் நீங்கினான்.
சீர்காழியின் வடக்குச் சிதம்பரம்.
கல்வியிற் பெரியவன் கம்பன்.

**105. ஆறாம் வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை?**
ஆறாம் வேற்றுமைக்கு உருபு அது, உடைய என்பவைகளாம்.
பொருள் சம்பந்தப் பொருளாம்
சாத்தனது தலை
முருகனுடைய வேல்

**106. ஏழாம் வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை?**
ஏழாம் வேற்றுமைக்கு உருபு இல், கண், உள், இடம் முதலியவைகளாம். பொருள் இடப் பொருளாம்.
ஊரில் இருந்தான்.
மணியின் கண் ஒளி.

**107. எட்டாம் வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை?**
எட்டாம் வேற்றுமைக்கு உருபு படர்க்கைப் பெயரின் ஈற்றில் ஏ, ஓ, மிகுதலும், அவ்வீறு திரிதலும் கெடுதலும் இயல்பாதலும், ஈற்றியலெழுத்துத் திரித்தலுமாம். பொருள் விளிப் பொருளாம்.
விளிப்பொருள் அழைக்கப்படும் பொருள்.

| | |
|---|---|
| மகனே கேள் | - ஏ மிகுந்தது |
| அப்பனோவுண்ணாய் | - ஓ மிகுந்தது. |
| பிள்ளாய் படி | - ஈறு திரிந்தது. |
| தோழ சொல்லாய் | - ஈறு கெட்டது |
| தம்பி வா | - ஈறு இயல்பாயிற்று. |
| மக்காள் படியுங்கள் | - ஈற்றயல் எழுத்துத் திரிந்தது. |

**108. ஐ முதலிய உருபேற்குமிடத்து தன்மைப் பெயர்கள் எப்படி விகாரப்பட்டு வரும்?**
யான், நான் என்பவை என் எனவும், யாம், நாம், யாங்கள், நாங்கள் என்பவை எம், நம், எங்கள், நங்கள் எனவும் விகாரப்பட்டு வரும்.
என்னை எம்மை, நம்மை, எங்களை, நங்களை மற்றை யுருபுகளோடும் இப்படியேயொட்டுக.

**109. ஐ முதலிய உருபேற்குமிடத்து முன்னிலைப் பெயர்கள் எப்படி விகாரப்பட்டு வரும்?**
நீ என்பது நின், உன் எனவும், நீர் நீங்கள் என்பவை நும், உம், நுங்கள், உங்கள் எனவும் விகாரப்பட்டு வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்னை நும்மை நுங்களை
உன்னை உம்மை உங்களை
மற்றை யுருபுகளோடும் இப்படியே ஒட்டுக.

**110. ஐ முதலிய உருபேற்குமிடத்துத் தான், தாம், தாங்கள், என்னும் படர்க்கைப் பெயர்கள் எப்படி விகாரப்பட்டு வரும்?**
தான் என்பது தன் எனவும், தாம், தாங்கள் என்பவை தம், தங்கள் எனவும் விகாரப்பட்டு வரும்.
தன்னை தம்மை தங்களை
மற்றைய யுருபுகளோடும் இப்படியே ஒட்டுக.

## வேற்றுமை முடிபு:

**111. எட்டு வேற்றுமைகளுள்ளும் எவ்வெவ் வேற்றுமை எவ்வெச் சொல்லைக் கொண்டு முடியும்**

1. எழுவாய் வேற்றுமை வினையையும் பெயரையும் வினாவை யுங் கொண்டு முடியும்.
   சாத்தன் வந்தான்
   சாத்தன் அவன்.
   சாத்தன் யாவன்?

2. நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் வினையை யும் பெயரையும் கொண்டு முடியும்.
   சாத்தனுக்குக் கொடுத்தான்.
   பிணிக்கு மருந்து
   அவையின்கண் இருந்தான்.
   மணியின்கண் ஒளி

3. ஆறாம் வேற்றுமையும் எல்லைப் பொருட்டாகிய ஐந்தாம் வேற்றுமையும் பெயரைக் கொண்டு முடியும்.
   சாத்தனது கை
   சீர்காழியின் வடக்கு

4. ஒழிந்த வேற்றுமைகள் வினையைக் கொண்டு முடியும்.
   குடத்தை வனைந்தான்.
   வாளால் வெட்டினான்.
   நோயின் நீங்கினான்.
   கொற்றா வா.

**பெயரியல் முற்றிற்று.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. வினையியல்

**112. வினைச்சொல்லாவது யாவை?**
ஒரு பொருளினது தொழில் நிகழ்ச்சியை அறிவிக்குஞ் சொல்லாம்.
(தொழில் நிகழ்ச்சி தொழிலினது நடத்தல்)

வினைச்சொல் வகை:

**113. வினைச்சொல் எத்தனை வகைப்படும்?**
தெரிநிலைவினை, குறிப்பீபுவினை என இரண்டு வகைப்படும்.

**114. தெரிநிலை வினையாவது யாது?**
காலத்தை வெளிப்படையாகக் காட்டும் வினை தெரிநிலை வினையாம்.
சாத்தன் நடந்தான்.
சாத்தன் நடக்கிறான்.
சாத்தன் நடப்பான்.

**115. குறிப்புவினை யாவது யாது?**
காலத்தைக் குறிப்பாகக் காட்டும் வினை குறிப்பு வினையாம்.
சாத்தன் முன்பு நல்லன்
சாத்தன் இப்பொழுது நல்லன்.
சாத்தன் இனி நல்லன்.

**116. தெரிநிலைவினை, குறிப்புவினை என்னும் இரண்டுந் தனித்தனி எத்தனை வகைப்படும்?**
முற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் என மும்மூன்று வகைப்படும் இவை எல்லாம் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும்.

முற்றுவினை

**117. முற்றுவினையாவது யாது?**
பால் காட்டும் விகுதியோடு கூடி நிறைந்து நின்று பெயரைக் கொண்டு முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தான் சாத்தன் - தெரிநிலை வினைமுற்று
நல்லன் சாத்தன் - குறிப்பு வினைமுற்று

**118. உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கை வினைமுற்றுக் கள் யாவை?**

அன், ஆன், என்னும் விகுதிகளையுடைய வினைகளாம்.
நடந்தனன் நடந்தான் - தெரிநிலை
சிறியன் சிறியோன் - குறிப்பு

**119. உயர்திணை பெண்பால் ஒருமை படர்க்கை வினைமுற்றுக் கள் யாவை?**

அள், ஆள் என்னும் விகுதிகளையுடைய வினைகளாம்.
நடந்தனள் நடந்தாள் - தெரிநிலை
சிறியள் சிறியாள் - குறிப்பு

**120. உயர்திணை பலர்பால் படர்க்கை வினைமுற்றுக்கள் யாவை?**

அர், ஆர், என்னும் விகுதிகளையுடைய வினைகளாம்.
நடந்தனர் நடந்தார் - தெரிநிலை
சிறியர் சிறியார் - குறிப்பு

**121. அஃறிணை ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்றுக்கள் யாவை?**

து, று என்னும் விகுதிகளையுடைய வினைகளாம்.
நடந்தது போயிற்று - தெரிநிலை
சிறியது அற்று - குறிப்பு

**122. அஃறிணை பலவின்பால் படர்க்கை வினைமுற்றுக்கள் யாவை?**

அ, ஆ என்னும் விகுதிகளையுடைய வினைகளாம். இவற்றுள் ஆ எதிர்மறையிடத்து வரும்.
நடந்தன நடவா - தெரிநிலை
சிறியேன் - குறிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்மை வினைமுற்று:

**123. தன்மையொருமை வினைமுற்றுக்கள் யாவை?**
ஏன் என்னும் விகுதிகளையுடைய வினைகளாம்.
நடந்தேன் - தெரிநிலை
சிறியேன் - குறிப்பு

**124. தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள் யாவை?**
அம், ஏம், ஓம் என்னும் விகுதிகளையுடைய வினைகளாம்.
நடந்தனம் நடந்தேம் நடந்தோம் - தெரிநிலை
சிறியம் சிறியேம் சிறியோம் - குறிப்பு

## முன்னிலை வினைமுற்று:

**125. முன்னிலை ஒருமை வினைமுற்றுக்கள் யாவை?**
ஆய், ஐ என்னும் பகுதிகளையுடைய வினைகளாம்.
நடந்தாய் நடந்தனை - தெரிநிலை
சிறியாய் சிறியை - குறிப்பு

**126. முன்னிலை பன்மை வினைமுற்றுக்கள் யாவை?**
ஈர் என்னும் விகுதியையுடைய வினைகளாம்.
நடந்தீர் - தெரிநிலை
சிறியீர் - குறிப்பு

## எதிர்மறை வினைமுற்று:

**127. எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றுக்கள் யாவை?**
இல், அல், ஆ என்னும் எதிர்மறை இடைநிலைகளைப் பெற்று வரும் வினைமுற்றுக்களாம்.

**128. எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றுக்கள் யாவை?**
அல், இல் என்னும் எதிர்மறைப் பண்படியாகத் தோன்றி வரும் வினைமுற்றுக்களாம்.
அல்லன் இலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னிலை யேவல் வினைமுற்று:

**129. முன்னிலையேவலொருமை வினைமுற்றுக்கள் யாவை?**

ஆய், இ, ஏல் என்னும் விகுதிகளையுடைய வினை முற்றுக் களாம்.

உண்ணாய் உண்ணுதி உண்ணேல்

உண், தின், பார், என ஆய் விகுதி குன்றியும் வரும். எதிர்மறை யேவலொருமை வழக்கத்திலே உண்ணாதே உண் ணாதிரு எனவும் வரும்.

**130. முன்னிலை யேவற் பன்மை வினைமுற்றுக்கள் யாவை?**

ஈர், உம், மின் என்னும் விகுதிகளையுடைய வினைகளாம்.

உண்ணீர் உண்ணும் உண்மின்

எதிர்மறை யேவற் பன்மை செய்யுளிலே உண்ணன் மின் எனவும் வழக்கத்திலே உண்ணாதேயுங்கள், உண்ணாதிருங்கள் எனவும் வரும்.

## வியங்கோள் வினைமுற்று:

**131. வியங்கோள் வினைமுற்றுக்கள் யாவை?**

க, அ என்னும் விகுதிகளைப் பெற்று இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாய் எதிர்காலம் காட்டி வரும் ஏவல் வினை முற்றுக்களாம்.

| | |
|---|---|
| யான் வாழ்க | அவள் வாழ்க |
| யாம் வாழ்க | அவர் வாழ்க |
| நீ வாழ்க | அது வாழ்க |
| நீர் வாழ்க | அவை வாழ்க |
| அவன் வாழ்க | ஐயா வாழ்க |

## செய்யுமென்னும் முற்று:

**132. செய்யுமென்னும் வாய்ப்பாட்டுப் படர்க்கை வினைமுற்று எப்பால்களுக்குப் பொதுவாய் வரும்?**

உயர்திணை யொருமைக்கும் அஃறிணை யொருமைப் பன்மைக்கும் பொதுவாய் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது வினைக் குறிப்பு:

**133. தெரிநிலை வினைமுற்றே யன்றிக் குறிப்பு வினைமுற்றும் பாலிடங்கட்கும் பொதுவாய் வருதலுண்டோ?**

1. வேறு, இல்லை, உண்டு, யார் என்னும் நான்கு வினைக் குறிப்பு முற்றும் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும்.

| | |
|---|---|
| அவன் அவள் அவர்<br>அது அவை<br>யான் யாம் நீ நீர் | வேறு, இல்லை, உண்டு, யார்? |

2. என், என்ன, என்னை என்னும் வினா வினைக்குறிப்பு முற்று அஃறிணை யொருமை பன்மைகளுக்குப் பொதுவாய் வரும்.

| | |
|---|---|
| அஃது<br>அவை | ஏன் என்ன? என்னை? |

பெயரெச்சம்:

**134. பெயரெச்சமாவது யாது?**

பால் காட்டும் முற்று விகுதி பெறாத குறைச் சொல்லாய்ப் பெயரைக் கொண்டு முடியும் வினையாம்.

உண்ட சாத்தன் - செய்த என்னும் வாய்ப்பாட்டு இறந்த காலத் தெரிலை வினைப் பெயரெச்சம்

உண்கின்ற சாத்தன் - செய்கின்ற என்னும் வாய்ப்பாட்டு நிகழ்காலத் தெரிநிலை வினைப் பெயரெச்சம்.

உண்ணுஞ் சாத்தன் - செய்யும் என்னும் வாய்ப்பாட்டு எதிர்காலத் தெரிநிலை வினைப் பெயரெச்சம்.

கரிய சாத்தன் - குறிப்பு வினைப் பெயரெச்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணாத சாத்தன் - எதிர்மறைத் தெரிநிலை வினைப் பெயரெச்சம்.

இல்லாத பொருள் - எதிர்மறைத் தெரிநிலை வினைப் பெயரெச்சம்.

## வினையெச்சம்:

**135. வினையெச்ச மாவது யாது?**

பால் காட்டும் முற்று விகுதி பெறாத குறைச்சொல்லாய் வினைச்சொல்லைக் கொண்டு முடியும் வினையாம்.

**136. தெரிநிலை வினையெச்சம் எத்தனை வகைப்படும்?**

செய்து என்னும் வாய்ப்பாட்டு இறந்தகால வினையெச்சம், செய் என்னும். வாய்ப்பாட்டு முக்காலத்திற்கு முரிய வினை யெச்சம், செயின் என்னும் வாய்ப்பாட்டு எதிர்கால வினையெச்சம் என மூவகைப்படும்.

**137. செய்து என்னும் வாய்ப்பாட்டு இறந்தகால வினையெச்சங்கள் யாவை?**

உ, இ, ய் என்னும் விகுதிகளைப் பெற்றுத் தன் கருத்தாவின் வினையைக் கொண்டு முடியும் வினையெச்சங்களாம்.
சாத்த னுண்டு வந்தான்.
சாத்த னோடி வந்தான்
சாத்தன் போய்த் திரும்பினான்.

**138. செய வென்னும் வாய்ப்பாட்டு முக்காலத்திற்குரிய வினை யெச்சங்கள் யாவை?**

அகர விகுதியைப் பெற்றுத் தன் கருத்தாவின் வினையையும் பிற கருத்தாவின் வினையையும் கொண்டு முடியும் வினையெச் சங்களாம்.

மழை பெய்ய நெல் விளைந்தது - பிற கரு, இறந்தகாலம்
சாத்த னுண்ண வந்தான் - தன் கரு, எதிர்காலம்.
சூரிய னுதிக்க வந்தான் - பிற கரு, நிகழ்காலம்.

எதிர்காலச் செய வென்னும் வினையெச்சம் உண்ணற்கு வந்தான் உண்ணும்படி வந்தான், உண்ணும் பொருட்டு வந்தான் எனவும் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**139. செயின் என்னும் வாய்ப்பாட்டு எதிர்கால வினையெச்சங்கள் யாவை?**

இன், ஆல், கால் முதலிய விகுதிகளைப் பெற்றுத் தன் கருத்தாவின் வினையையும் பிற கருத்தாவின் வினையையும் கொண்டு முடியும் வினையெச்சங்களாம்.

அவ னுண்ணிற் வருவான் - தன்
அவ னுண்ணிற் போவேன் - பிற
அவ னுண்டால் வருவேன் - தன்
அவ னுண்டாற் போவேன் - பிற
அவ னுண்டக்கால் வருவேன் - தன்
அவ னுண்டக்காற் போவேன் - பிற

**140. எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சங்கள் யாவை?**

எதிர்மறை ஆகார இடைநிலையோடு உ, மல், மே என்னும் விகுதிகளைப் பெற்று வரும் வினையெச்சங்களாம்.

அவன் உண்ணாது வந்தான்.
நான் விழாமற் காத்தான்.
நான் போகாமே தடுத்தான்.

**141. குறிப்பு வினையெச்சங்கள் யாவை?**

பண்படியாகத் தோன்றி அ, றி, து, மல் முதலிய விகுதிகளைப் பெற்று வரும் வினையெச்சங்களாம்.

மெல்லப் பேசினான்.
அருளின்றிச் சொன்னான்.
அற மல்ல தில்லை
அற மல்லாமலில்லை.

## தெரிநிலை வினைப் பகுப்பு:

**142. தெரிநிலை வினைச் சொற்கள் இன்னும் எவ்வெவ் வகையிற் பிரிவுபட்டு வழங்கும்?**

செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாத வினை எனவும், தன்வினை, பிறவினை எனவும், செய்வினை செயப்பாட்டுவினை எனவும் வெவ்வேறு வகையிற் பிரிவுபட்டு வழங்கும்.

நடந்தான் - செயப்படுபொருள் குன்றியவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டான் - செயப்படுபொருள் குன்றாதவினை

நடந்தான்<br>உண்டான் } தன்வினை

நடப்பித்தான்<br>உண்பித்தான் } பிறவினை

அடித்தான் - செய்வினை

அடிக்கப்பட்டான் - செயப்பாட்டுவினை.

## வினையாலணையும் பெயர்:

**143. பெயர்ச்சொல்லே யன்றி வினைச்சொல்லும் வேற்றுமை யேற்று வருமா?**

பொருளினது தொழில் நிகழ்ச்சியை அறிவிக்கும் முற்றுவினை அப்பொருளுக்குப் பெயராய் வழங்கப்படும்போது வேற்றுமை யுருபேற்று வரும்.

வந்தானை<br>வந்தானால் } தெரிநிலை வினையாலணையும் பெயர்

முன்பு பெரியனை<br>முன்பு பெரியனால் } குறிப்பு வினையாலணையும் பெயர்

**வினையியல் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. இடையியல்

**144. இடைச்சொல் லாவது யாது**
தனித்து வழங்குத லின்றிப் பெயரையும் அடுத்து வரும் சொல்லாம்.

**145. இடைச்சொற்கள் எவை?**
வேற்றுமை உருபுகளும், விகுதிகளும், இடைநிலைகளும் சாரியைகளும் போல் நேர் நிகர் முதலிய உவமவுருபுகளும், சுட்டும் வினாவும் பிற வழியினாலே தத்தமக்குரிய பொருளை யறிவித்து வருவனவுமாம்.

**146. தத்தம் பொருளை அறிவித்து வரும் இடைச்சொற்கள் எவை?**
எ, ஒ, உம், மற்று, என, என்று, இனி, முன், பின், கீழ், மேல், தோன்றும் ஐயோ முதலியவைகளாம்.

**147. ஏகார இடைச்சொல் எத்தனை பொருளைத் தரும்?**
ஏகாரம் இரண்டு பொருளைத் தரும் அவையாவன.
1. தேற்றம் - உண்டே கடவுள்
2. பிரிநிலை - அவனே யெடுத்தான்.

**148. ஓகார இடைச்சொல் எத்தனை பொருளைத் தரும்?**
ஓகாரம் மூன்று பொருளைத் தரும். அவையாவன.
1. ஐயம் - குற்றியோ மகனோ
2. எதிர்மறை - அவனோ கொண்டான்
3. வினா - மாடோ வந்தது.

**149. உம்மென்னும் இடைச்சொல் எத்தனை பொருளைத் தரும்?**
உம் என்பது ஐந்து பொருளைத் தரும். அவையாவன.
1. எண் - பொன்னும் வெள்ளியும்.
2. எச்சம் - சாத்தனும் வந்தான்.
3. முற்று - எல்லாரும் வந்தார்
4. சிறப்பு - வேடரும் மயங்கும் மலை
5. எதிர்மறை - விளையாடினும் பொய் பேசாதே.

**இடையியல் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. உரியியல்

**150. உரிச்சொல் லாவது யாது?**
பன்மை யுணர்த்திப் பெயர் வினைகளுக்கு உரிமை பூண்டு நிற்குஞ் சொல்லாம்.
நனி பேதை, நனி தின்றான்.

**உரியியல் முற்றிற்று.**

**சொல்லதிகாரம் முற்றுப் பெற்றது.**

# III. தொடர் மொழியதிகாரம்

## 1. தொகை நிலைத் தொடரியல்

**151. தொடர்மொழி யாவது யாது?**
ஒன்றோடொன்று பொருள்படத் தொடர்ந்து நிற்கும் இரண்டு முதலிய சொற்களினது கூட்டமாம்.

**152. சொல்லோடு சொற்றொடருந் தொடர்ச்சி எத்தனை வகைப்படும்.?**
தொகைநிலைத் தொடர், தொகாநிலைத் தொடர் என இரண்டு வகைப்படும்.

**153. தொகைநிலைத் தொடராவது யாது?**
வேற்றுமையுருபு முதலியன நடுவே தொக்கு நிற்கத் தொடர்வதாம்.

**154. தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?**
வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஆறு வகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேற்றுமைத் தொகை:

**155. வேற்றுமைத்தொகை யாவது யாது?**

ஐ முதலிய ஆறு வேற்றுமை உருபும் நடுவே தொக்க தொடர்மொழியாம்.

| | | |
|---|---|---|
| நிலங்கடந்தான் | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| கல் எறிந்தான் | - | மூன்றாம் வேற்றுமைத்தொகை |
| சாத்தன் மகன் | - | நான்காம் வேற்றுமைத்தொகை |
| ஊர் நீங்கினான் | - | ஐந்தாம் வேற்றுமைத்தொகை |
| சாத்தன் கை | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| காட்டுப் புலி | - | ஏழாம் வேற்றுமைத்தொகை |

## வினைத்தொகை:

**156. வினைத்தொகை யாவது யாது?**

காலங்காட்டும் இடைநிலையும் விகுதியும் தொக்க பெயரெச்சத் தொடராம்.

| | | |
|---|---|---|
| நேற்றுக்கொல் யானை | - | இறந்தகால வினைத்தொகை |
| இன்றுகொல் யானை | - | நிகழ்கால வினைத்தொகை |
| நாளைகொல் யானை | - | எதிர்கால வினைத்தொகை |

இவை கொன்ற, கொல்கின்ற, கொல்லும் என விரியும்.

## பண்புத்தொகை:

**157. பண்புத்தொகை யாவது யாது?**

பண்புப் பெயருக்கும், பண்பிப் பெயருக்கும் நடுவே ஆகிய என்னும் பண்புருபு தொக்க தொடராம்.

செந்தாமரை- இது செம்மையாகிய தாமரை என விரியும்.

ஒரு பொருளுக்குரிய பொதுப் பெயருக்குஞ் சிறப்புப் பெயருக்கும் நடுவே ஆகிய என்னும் பண்புருபு தொக்க தொடர் இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாம்.

சாரைப்பாம்பு - இது சாரையாகிய பாம்பு என விரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. தொகாநிலைத் தொடரியல்

**161. தொகாநிலைத் தொடராவது யாது?**

நடுவே வேற்றுமையுருபு முதலியன தொகாது நிற்கத் தொடர்வது தொகாநிலைத் தொடராம்.

**162. தொகாநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?**

எழுவாய்த் தொடர், விளித்தொடர், வேற்றுமைத் தொகாநிலைத் தொடர், வினைமுற்றுத் தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத் தொடர் என ஒன்பது வகைப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | சாத்தன் வந்தான் | - எழுவாய்த்தொடர் |
| 2. | சாத்தா வா | - விளித்தொடர் |
| 3. | குடத்தை வனைந்தான் | - வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் |
| 4. | உண்டான் சாத்தன் | - வினைமுற்றுத்தொடர் |
| 5. | உண்ட சாத்தன் | - பெயரெச்சத் தொடர் |
| 6. | உண்டு வந்தான் | - வினையெச்சத் தொடர் |
| 7. | நனிபேதை | - உரிச்சொற்றொடர் |
| 8. | பாம்பு பாம்பு | - அடுக்குத்தொடர் |

**தொகாநிலைத் தொடரியல் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உவமைத்தொகை:

**158. உவமைத்தொகை யாவது யாது?**
போல முதலிய உவமவுருபு தொக்க தொடராம்.
பவளவாய் - இது பவளம் போலும் வாய் என விரியும்.

## உம்மைத்தொகை:

**159. உம்மைத்தொகை யாவது யாது?**
இடையிலும் கடையிலும் உம்மை தொக்க தொடராம்.
இராப்பகல் - இது இரவும் பகலும் என விரியும்.

## அன்மொழித்தொகை:

**160. அன்மொழித்தொகை யாவது யாது?**
வேற்றுமைத்தொகை முதலாகிய ஐவகைத் தொகைக்கும் புறத்தில் வேறுமொழி தொக்க தொடராம்.

1. பூங்குழல் - இரண்டாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பூவையுடைய குழலினை யுடையாள் என விரியும்.
2. தாழ்குழல் - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தாழ்ந்த குழலினையுடையாள் என விரியும்.
3. கருங்குழல் - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கருமையாகிய குழலினையுடை யாள் என விரியும்.
4. தேன்மொழி - உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தேன்போலும் மொழியினை யுடையாள் என விரியும்.
5. உயிர்மெய் - உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது உயிரும் மெய்யும் கூடிப் பிறந்த எழுத்து என விரியும்.

**தொகைநிலைத் தொடரியல் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. ஒழிபியல்

**163. தொடர்மொழி எத்தனை வகைப்படும்?**
முற்றுத்தொடர்மொழி, எச்சத்தொடர்மொழி என இரண்டு வகைப்படும்.

**164. முற்றுத்தொடர் மொழி எத்தனை வகைப்படும்?**
எழுவாயும் பயனிலையும் செயப்படுபொருள் முதலியவைகளோடு கூடாதாயினும் கூடியதாயினும் முடிவு பெற்று நிற்குந் தொடர்மொழியாம். இது வாக்கியம் எனப்படும்.
சாத்தன் வந்தான்
சாத்தன் சோற்றை உண்டான்.

**165. எச்சத்தொடர்மொழி யாவது யாது?**
முடிவு பெறாது முற்றுத்தொடர்மொழிக்கு உறுப்பாக வரும் தொடர்மொழியாம்.
யானைக் கொம்பு
உண்ட சாத்தன்

**166. பயனிலை எழுவாயோடு எப்படி இசைந்து நிற்றல் வேண்டும்?**
பயனிலை எழுவாயோடு திணை, பால், இடம் என்னும் மூன்றிலும் மாறுபடாது இசைந்து நிற்றல் வேண்டும்.

நம்பி வந்தான்
நங்கை வந்தாள்
அந்தணர் வந்தார்
நான் வந்தேன்
நீ வந்தாய்
} வழாநிலை

| | | |
|---|---|---|
| நம்பி வந்தது | - | திணைவழு |
| நங்கை வந்தார் | - | பால்வழு |
| அவன் வந்தேன் | - | இடவழு |

**167. பல எழுவாய் அடுக்கி வந்தால் எப்பயனிலை கொண்டு முடியும்?**
உயர்திணைப் படர்க்கை எழுவாய் பல அடுக்கி வந்தால் பலர்பாற் படர்க்கைப் பயனிலை கொண்டு முடியும்.
அஃறிணைப் படர்க்கை எழுவாய் பல அடுக்கி வந்தாற் பலவின்பாற் படர்க்கைப் பயனிலை கொண்டு முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியு நங்கையும் வந்தார்.
யானையுங் குதிரையும் வந்தன.

**168. வெவ்வேறிடத்து எழுவாய் அடுக்கி வந்தால் எப்பயனிலை கொண்டு முடியும்?**

1. முன்னிலை எழுவாயோடு படர்க்கை எழுவாய் அடுக்கி வரின், முன்னிலைப் பன்மைப் பயனிலை கொண்டு முடியும்.

   நீயும் அவனும் போயினீர்

2. தன்மை எழுவாயோடு முன்னிலை எழுவாயேனும், படர்க்கை எழுவாயேனும், இவ்விரண்டெழுவாயேனும் அடுக்கி வரின் தன்மைப் பன்மைப் பயனிலை கொண்டு முடியும்.
   யானும் நீயும் போயினோம்.
   யானும் நீயும் அவனும் போயினோம்.

**169. ஒருமைப்பால் பன்மைப் பாலாகவுஞ் சொல்லப்படுமோ?**
ஒருவரை உயர்த்திச் சொல்லுமிடத்து, ஒருமைப்பால் பன்மைப் பாலாகவுஞ் சொல்லப்படும்.
புலவனார் வந்தார்.

**170. முக்காலத்திலும் இடையறாது நடக்கும் பொருளின் வினை எக்காலத்தினாலே சொல்லப்படும்?**
நிகழ்காலத்தினாலே சொல்லப்படும்.

மலை நிற்கின்றது.
கடவுளொருவர் இருக்கிறார்.

**171. ஒரு காலவினை மற்றொரு காலவினையாகவும் சொல்லப்படுமோ?**

1. எதிர்கால வினை விரைவு பற்றி நிகழ்கால வினையாக வேனும் இறந்தகால வினையாகவேனும் சொல்லப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறேன் வருகிறேன். இது சீக்கிரம் வருவேன் எனப் பொருள்படும்.
உண்டேன் உண்டேன். இது சீக்கிரம் உண்பேன் எனப் பொருள்படும்.

2. எதிர்கால வினை மிகுதி பற்றியும் தெளிவு பற்றியும் இறந்தகால வினையாகவும் சொல்லப்படும்.
   1. களவு செய்யிற் கை அறுக்கப்பட்டாய்.
   2. அரசனோ டெதிர்த்தாற் கெட்டாய்.

**172. இத்தனையென்று தொகைப்பட்டு நிற்கும் பொருளும் எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளும் முடிக்குஞ் சொல்லைப் பெற்று வருமிடத்து எப்படி வரும்?**

முற்றும்மை பெற்று வரும்.

1. தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்
2. ஒளி முன் இருள் எங்குமில்லை.

## ஒழிபியல் முற்றிற்று

**தொடர்மொழியதிகாரம் முற்றுப் பெற்றது.**

**இலக்கண வினாவிடை முற்றுப்பெற்றது.**

**பரமபதி துணை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணங் கற்போரின் தேவையின் பொருட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களால் அருளிச் செய்யப்பட்ட **"இலக்கணச் சுருக்கம்"** என்ற நூலில் இருந்து ஒழிபியல், பகுபதமுடிபு, சொல்லிலக்கணங் கூறுதல், சொற்றொடரிலக் கணங் கூறுதல் என்ற பகுதிகளைப் பின்னிணைப்பாகத் தந்துள்ளோம்.

# 3. ஒழிபியல்

**தொடர் மொழிப் பாகுபாடு**

**367.** தொடர்மொழி முற்றுத் தொடர்மொழியும் எச்சத் தொடர்மொழியும் என இரு வகைப்படும்.

**368.** முற்றுத் தொடர்மொழியாவது எழுவாயும் பயனிலையுஞ் செயப்படு பொருண் முதலியவைகளோடு கூடாதாயினுங் கூடியாயினும் முடிவு பெற்று நிற்குந் தொடர் மொழியாம். வடநூலார் இம்முற்றுத் தொடர்மொழியை வாக்கிய மென்பர்.

சாத்தன் வந்தான்
சாத்தன் சோற்றை யுண்டான்

**369.** எச்சத் தொடர்மொழியாவது, முடிவு பெறாது அம்முற்றுத் தொடர் மொழிக்கு உறுப்பாக வருந் தொடர் மொழியாம்.

யானைக் கோடு
யானையது கோடு

**பரீட்சை வினாக்கள்:-** தொடர்மொழி எத்தனை வகைப்படும்? முற்றுத் தொடர்மொழியாவது யாது? எச்சத் தொடர் மொழியாவது யாது?

## வாக்கியப் பொருளுணர்வுக்குக் காரணம்

**370.** வாக்கியத்தின் பொருளை உணர்தற்குக் காரணம், அவாய் நிலை, தகுதி, அண்மை, கருத்துணர்ச்சி என்னும் நான்குமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**371.** ஆவாய்நிலையாவது, ஒருசொல் தனக்கு எச்சொல் இல்லாவிடின் வாக்கியப் பொருளுணர்ச்சி உண்டாகாதோ அச்சொல்லை அவாவி நிற்றலாம்

ஆவைக் கொணா என்னுமிடத்து, ஆவை என்பது மாத்திரஞ் சொல்லிக் கொணா வென்பது சொல்லாவிடினும், கொணா வென்பது மாத்திரஞ் சொல்லி ஆவை என்பது சொல்லாவிடினும், வாக்கியப் பொரு ளுணர்ச்சி உண்டாகாது. ஆவைக் கொணா என இரண்டுஞ் சொல்லின், ஆவாய்நிலை காரணமாக வாக்கியப் பொருளுணர்ச்சி உண்டாதல் அறிக.

**372.** தகுதியாவது, பொருட்குத் தடையுணர்ச்சி இல்லாமையாம்

செருப்பா னனை என்னு மிடத்து, நனைத்தலின் செருப்புக் கருவி யன்று என்கின்ற உணர்ச்சி தடையுணர்ச்சி, இவ்வுணர்ச்சி இருந்தால், வாக்கியப் பொருளுணர்ச்சி உண்டாகாது.

நீரா னனை என்னு மிடத்து, நனைத்தலின் நீர் கருவியா தலாற் றடையுணர்ச்சி யில்லை: ஆகவே தகுதி காரணமாக வாக்கியப் பொருளுணர்ச்சி யுண்டாதலறிக.

**373.** அண்மையாவது, காலம் இடையீ டின்றியும் வாக்கியப் பொரு ளுணர்ச்சிக்குக் காரணமல்லாத சொல் இடையீ டின்றியுஞ் சொல்லப்படுத்தலாம்.

ஆவைக்கொணா என்பது, யாமத்துக்கு ஓவ்வொரு சொல்லாகச் சொல்லப்படின், வாக்கியப் பொருளுணர்ச்சி உண்டாகாது, ஒரு தொடராக விரையச் சொல்லப்படின், வாக்கியப் பொருளுணர்ச்சி யுண்டாத லறிக.

மலையுண்டா னெருப்புடையது தேவதத்தன் என்னுமிடத்து, மலை நெருப்புடையது என்னும் வாக்கியத்தால் உண்டாகும் பொருளு ணர்ச்சிக்குக் காரண மல்லாத உண்டான் என்னுஞ் சொல் அற் சொற்கட்கு இடையீடாக நின்றது உண்டான் தேவதத்தன் என்னும் வாக்கியத்தால் உண்டாகும் பொருளுணர்ச் சிக்குக் காரணமல்லாத நெருப்புடையது என்னுஞ் சொல் அச் சொற்கட்கு இடையீடாக நின்றது. இப்படி இடை யிட்டுச் சொல்லாது மலை நெருப்புடையது-உண்டான் தேவதத்தன் எனச் சொல்லின், அண்மை காரணமாக வாக்கியப் பொரு ளுணர்ச்சி யுண்டாத லறிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**374.** கருத்துணர்ச்சியாவது, ஒருசொல் எப்பொருளைத் தரல் வேண்டும் என்னுங் கருத்தாற் சொல்லப்பட்டதோ அக்கருத்தைச் சமய விசேடத்தால் அறிதலாம்.

மாவைக் கொண்டு வா என்னு மிடத்து, மா வென்பது பல பொரு ளொருசொல் லாதலால் வாக்கியப் பொருளுணர்ச்சி யுண்டாகாது. இது பசித்தோனாற் சொல்லப்படின் தின்னுமா வெனவும், கவசம் பூண்டு நிற்போனாற் சொல்லப்படிற் குதிரை யெனவும், சொல்லுவான் கருத்துச் சமயவிசேடத்தால் அறியப்படும்: அப்போது அக்கருத்துணர்ச்சி காரணமாக வாக்கியப் பொருளுணர்ச்சி யுண்டாத லறிக.

**பரீசைஷ வினாக்கள்:-** வாக்கியத்தின் பொருளை உணர்தற்குக் காரணம் என்னை? அவாய்நிலையாவது யாது? தகுதியாவது யாது? அண்மை யாவது யாது? கருத் துணர்ச்சியாவது யாது?

## உருபும் வினையும் அடுக்கி முடிதல்

**375.** வேற்றுமை யுருபுகள் விரிந்தாயினும் மறைந்தாயினும் ஒன்று பல அடுக்கி வரினும், கலந்து பல அடுக்கி வரினும், வினை முற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் ஒன்று பல அடுக்கி வரினும், அப்பலவுந் தம்மை முடித்தற்கரிய ஒரு சொல்லைக் கொண்டு முடியும் .

| | |
|---|---|
| சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினான்<br>சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தந்தை<br>அருளற முடையன் | உருபுகள் விரிந்தும் மறைந்தும் ஒன்று பல அடுக்கல் |
| அரசன் பகைவனை வாளால் வெட்டினான்<br>அரசன் வாள் கைக்கொண்டான் | உருபுகள் விரிந்தும் மறைந்தும் கலந்தும் பல அடுக்கல். |
| ஆடினான் பாடினான் சாத்தன்<br>இளையன் மெல்லியண் மடந்தை | வினைமுற்று ஒன்று பல அடுக்கல். |
| கற்ற கேட்ட பெரியோர்<br>நெடிய கரிய மனிதன் | பெயரெச்சம் ஒன்று பல அடுக்கல். |
| கற்றுக் கேட்டறிந்தார்<br>விருப்பின்றி வெறுப்பின்றி யிருந்தார் | வினையெச்சம் ஒன்று பல அடுக்கல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**376.** வேற்றுமை யுருபு, ஒன்று பல வடுக்கி வருமிடத்து, ஒரு தொட ரினுள்ளே இறுதி யினின்று பெயரின் மாத்திரம் விரிந்து நின்று மற்றைப் பெயர்க ளெல்லாவற்றினுந் தொக்கு வருதலு முண்டு.

பொரு ளின்பங்களைப் பெற்றான்
சேரசோழ பாண்டியர்க்கு நண்பன்
தந்தை தாயி னீங்கினான்

**377.** ஒரு தொடரினுள் ஒரு பொருளுக்கே பல் பெயர் வருதலும், அப் பெயர் தோறும் ஒரு வேற்றுமை யுருபே வருதலும் உளவாம். வரினும், பொருளொன்றே யாதலால் எண்ணும்மை பெறுத லில்லை.

சங்கரனை யெண்குணனைச் சம்புவைநால் வேதனொரு
கங்கரனை நெஞ்சே கருது.

**பரீட்சை வினாக்கள்:-** வேற்றுமை யுருபுகள் ஒன்று பல அடுக்கி வரினும், கலந்து பல அடுக்கி வரினும், வினைமுற்றும் பெயரெச்சமும் வினை யெச்சமும் ஒன்று பல அடுக்கி வரினும், அப் பலவும் எப்படி முடியும்? வேற்றமை யுருபு, ஒன்று பல அடுக்கி வருமிடத்து, ஒரு தொடரினுள்ளே இறுதியினின்ற பெயரின் மாத்திரம் விரிந்து நின்று, மற்றப் பெயர் களெல்லாவற்றிலுந் தொக்கு வருதலும் உண்டோ? ஒரு தொடரினுள், ஒரு பொருளுக்கே பல பெயர் வருதலும், அப் பெயர் தோறும் ஒரு வேற்றுமை யுருபே வருதலும் உளவோ?

## திணைபாலிட முடிபு

**378.** முடிக்கப்படுஞ் சொல்லோடு முடிக்குச் சொல்லானது, திணை பால் இடங்களில் மாறுபடாது இயைந்து நிற்றல் வேண்டும் இயைந்து நில்லாதாயின் வழுவாம்.

நம்பி வந்தான்
நங்கை வந்தாள்
அந்தணர் வந்தார் } வழாநிலை
நான் வந்தேன்
நீ வந்தாய்

| | | |
|---|---|---|
| நம்பி வந்து | - | திணை வழு |
| நங்கை வந்தான் | - | பால் வழு |
| அவன் வந்தேன் | - | இட வழு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**379.** இரண்டு முதலிய உயர்திணை படர்க்கை எழுவாய் அடுக்கி வரின், பலர்பாற் படர்க்கைப் பயனிலைகொண்டு முடியும். இரண்டு முதலிய அஃறிணைப் படர்க்கை யெழுவாய் அடுக்கி வரின், பலவின்பாற் படர்க்கைப் பயனிலை கொண்டு முடியும்.

நம்பியு நங்கையும் வந்தார்
யானையுங் குதிரையும் வந்தன

**380.** முன்னிலை எழுவாயோடு படர்க்கை யெழுவாய் அடுக்கி வரின், முன்னிலைப் பன்மைப் பயனிலை கொண்டு முடியும். அது உளப்பாட்டு முன்னிலைப் பன்மை எனப்படும்

நீயு மவனும் போனீர்

**381.** தன்மை எழுவாயோடு முன்னிலை யெழுவாயே யேனும் படர்க்கை யெழுவாயேனும் இவ்விரண்டு டெழுவாயு மேனும் அடுக்கிவரின், தன்மைப் பன்மைப் பயனிலை கொண்டு முடியும். இது உளப்பட்டுத் தன்மைப் பன்மை எனப்படும்

யானும் நீயும் போயினோம்
யானு மவனும் போயினோம்
யானு நீயு மவனும் போயினோம்

**382.** திணை யையந் தோன்றிய விடத்து உருவு, வடிவு என்னும் பொதுச் சொற்களாலும், உயர்திணைப் பாலையந் தோன்றிய விடத்து அத்திணைப் பன்மைச் சொல்லாலும், அஃறிணைப் பாலையந் தோன்றிய விடத்துப் பால் பகா வஃறிணைச் சொல்லாலுங் கூறல் வேண்டும்.

1. குற்றியோ மனுடனோ அங்குத் தோன்றுகிற உரு? } திணை யையம்
2. ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகிறவர் } உயர்திணைப்பா லையம
3. ஒன்றோ பலவோ அங்கு வந்த குதிரை? } அஃறிணைப்பா லையம்

**383.** இருதிணையில் ஒரு திணை துணிந்த விடத்தும், இரு பாலில் ஒரு பால் துணிந்த விடத்தும், மற்றொன்றல்லாத தன்மையைத் துணிந்த பொருண்மேல் வைத்துக் கூறல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சுருங்கச் சொல்லல் என்னும் அழகைப் பயப்பித்தலாற் சிறப்புடைத்தாம்.

**1.** (குற்றியெனின்) மனுட ன்று

எனவும்,

(மனுடனெனின்) குற்றி யல்லன்

எனவும்,

**2.** (ஆண்மகனெனின்) பெண்மக ளல்லன்

எனவும்

(பெண்மகளெனின்) ஆண்மக னல்லள்

எனவும்

**3.** (ஒன்றெனின்) பல வன்று

எனவும்,

(பலவெனின் ) ஒன்றல்ல

எனவும் கூறுக.

**பரீக்ஷை வினாக்கள்:-** முடிக்கப்படுஞ் சொல்லோடு முடிக்குஞ் சொல்லானது எப்படி இயைந்து நிற்றல் வேண்டும்? இரண்டு முதலிய உயர் திணைப் படர்க்கை யெழுவாய் அடுக்கி வரின், எப்பயனிலை கொண்டு முடியும்? இரண்டு முதலிய அஃறிணைப் படர்க்கை யெழுவாய் அடுக்கி வரின், எப்பயனிலை கொண்டு முடியும்? முன்னிலை யெழுவாயோடு படர்க்கை யெழுவாய் அடுக்கி வரின் எப்பயனிலை கொண்டு முடியும்? தன்மை யெழுவாயோடு முன்னிலை யெழுவாயேனும் படர்க்கை எழுவா யேனும் இவ்விரண்டெழுவாயுமேனும் அடுக்கி வரின், எப்பயனிலை கொண்டு முடியும்? திணை யையத்தையும் பா லையத்தையும் எந்தெந்தச் சொல்லாற் கூறல் வேண்டும்? இரு திணையில் ஒரு திணை துணிந்த விடத்தும் இரு பாலில் ஒரு பால் துணிந்த விடத்தும் மற்றொன்றல்லாத தன்மையை எப்பொருண் மேல் வைத்துக் கூறல் வேண்டும்?

## திணை பா லிடப் பொதுமை நீங்கு நெறி

**384.** திணை பா லிடங்கட்குப் பொதுவாகிய பெயர் வினைகட்கு முன்னும் பின்னும் வரும் சிறப்பும் பெயருஞ் சிறப்பு வினையும், அவற்றின் பொதுத் தன்மையை நீக்கி, ஒன்றனை யுணர்த்தும்.

சாத்த னிவன், சாத்த னிது

எனவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது

எனவும் பெயர்த்திணைப் பொதுமையைப் பின் வந்த சிறப்பும் பெயரும் வினையும், நீக்கி, ஒன்றனை யுணர்த்தின.

ஒருவரென்னையர், ஒருவரென்றாயர்

எனவும்,

மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன

எனவும் பெயர்ப் பாற் பொதுமையைப் பின் வந்த சிறப்பும் பெயரும் வினையும் நீக்கி ஒரு பாலை யுணர்த்தின.

யாமெல்லாம் வருவம், நீயி ரெல்லாம் போமின்,
அவரெல்லா மிருந்தார்

எனப் பெய ரிடப் பொதுமையை முன் வந்த சிறப்பும் பெயரும் பின் வந்த சிறப்பு வினையும் நீக்கி ஒவ்வோ ரிடத்தை யுணர்த்தின.

வாழ்க அவன், அவள், அவர், அது, அவை,
யான், யாம், நீ, நீர்

என வினை திணை பாலிடப் பொதுமையைப் பின் வந்த சிறப்புப் பெயர்கள் நீக்கி ஒரு திணையையும் பாலையும் இடத்தையும் உணர்த்தின.

**385.** பெயர் வினையிரண்டும் உயர்திணை யாண் பெண் இரண்டற்கும் பொதுவாகவேனும். அஃறிணை யாண் பெண் இரண்டற்கும் பொதுவாக வேனும் வருமிடத்து, அப்பாலிரண்டனுள் ஒரு பாற்கே யுரிய தொழின் முதலிய குறிப்பினால், அப்பாலானது துணியப்படும்.

ஆயிர மக்கள் போர் செய்யப் போயினார் என்னு மிடத்து, மக்களென்னும் பெயரும் போயினா ரென்னும் வினையும் உயர்திணை யாண் பெண் இருபாற்கும் பொது வாயினும் போர் செய லென்னுந் தொழிற் குறிப்பினால் ஆண்பால் துணியப்பட்டது.

பெருந்தேவி மகவீன்ற கட்டிலினருகே நால்வர் மக்களுளர் என்னு மிடத்து மக்க ளென்னும் பெயரும் உளர் என்னும் வினையும் உயர்தினை யாண் பெண் இருபாற்கும் பொதுவாயினும், ஈனுத வென்னுந் தொழிற் குறிப்பினாற் பெண்பால் துணியப்பட்டது.

இப் பெற்றங் முழ வொழிந்தன என்னுமிடத்து, பெற்ற மென்னும் பெயரும் ஒழிந்தன வென்னும் வினையும் அஃறிணை யாண் பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபாற்கும் பொதுவாயினும், உழ வென்னுந் தொழிற் குறிப்பினால் எருது துணியப்பட்டது.

இப்பெற்றங் கறத்த லொழிந்தன என்னு மிடத்துப், பெற்ற மென்னும் பெயரும் ஒழிந்தன வென்னும் வினையும் அ..றிணை யாண் பெண் இருபாற்கும் பொதுவாயினும் கறத்தலென்னுந் தொழிற் குறிப்பினாற் பெண் பசு துணியப்பட்டது.

**பரீகைூஷ வினாக்கள்:-** திணை பால் இடங்கட்குப் பொதுவாகிய பெயர் வினைகளின் பொதுதன்மையை நீக்கி, ஒன்றனை உணர்த்துவன யாவை? பெயர் வினை இரண்டும், உயர்திணை யாண் பெண் இரண்டற்கும் பொது வாகவேனும், அ..றிணை யாண் பெண் இரண்டற்கும் பொதுவாகவேனும் வருமிடத்து, அப்பாலிரண்டனுள் ஒன்று எதனாலே துணியப்படும்?

## உயர்திணை தொடர்ந்த அ∴றிணை

386. உயர்திணை யெழுவாயோடு கிழமைப் பொருள் படத்தொடர்ந்து எழுவாயாக நிற்கும் அ..றிணைப் பொருளாதி யாறும் உயர்திணை வினை யான் முடியும்.

நம்பி பொன் பெரியன்
நம்பி நாடு பெரியன்
நம்பி வாழ்நாள் பெரியன்
நம்பி மூக்குக் கூரியன
நம்பி குடிமை நல்லன்
நம்பி நடை கடியன்

இங்கே உயர்திணை எழுவாயின் பயனிலையோடு அ..றிணை யெழுவாயும் முடிந்த தறிக.

மாடு கோடு' கூரிது என்னுமிடத்தும், மாடு என்னும் அ..றிணை யெழுவாயின் பயனிலையாகிய கூரிது என்னும் வினையோடு அதன் கிழமைப் பொருள்பட எழுவாயாக நின்ற கோடு என்பது முடிவதறிக.

**பரீகைூஷ வினா:-** உயர்திணை யெழுவாயோடு கிழமைப் பொருள்படத் தொடர்ந்து, எழுவாயாக நிற்கும் அ..றிணைப் பொருளாதியாறும் எத்திணை வினையான் முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்த திணை பால்களுக்கு ஒரு முடிபு

**387.** இரு திணைப் பொருள்கள் கலந்து ஒரு தொடராக வருமிடத்தும், ஆண்,பெண் என்னும் இருபாற் பொருள்கள் கலந்து ஒரு தொடராக வருமிடத்தும், சிறப்பினாலும் மிகுதியினாலும் இழிவினாலும் ஒரு முடிபைப் பெறும்.

"திங்களுஞ் சான்றோரு மொப்பர்",

என இரு திணைப் பொருள்கள் கலந்து சிறப்பினால் உயர்திணை முடிபைப் பெற்றன. சான்றோர் திங்கள் போல மறுத் தாங்க மாட்டாமை இங்கே சிறப்பு.

"பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தோர் குழவியெனு மிவர்கள்"

என இரு திணை பொருள்கள் கலந்து மிகுதியால் உயர்திணை முடிபைப் பெற்றன. அஃறிணைப் பொருள் ஒன்றேயாக உயர் திணைப் பொருள் ஐந்தாதல் இங்கே மிகுதி.

"மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா"

என இரு திணைப் பொருள்கள் கலந்து இழிவினால் அஃறிணை முடிபைப் பெற்றன. மூர்க்கக் குணமுடமை இங்கே இழிவு.

தேவதத்தன் மனைவியுந் தானும் வந்தான்.

எனப் பாற் பொருள்கள் கலந்து சிறப்பினால் ஆண்பால் முடிபைப் பெற்றன. பெண்ணினும் ஆண் உயர்ந்தமை இங்கே சிறப்பு.

**பரீசைஷ வினா:-** இரு திணைப் பொருள்கள் கலந்து ஒரு தொடராக வருமிடத்தும், ஆண் பெண் என்னும் இருபாற் பொருள்கள் கலந்து ஒரு தொடராக வருமிடத்தும் அவை பலவும் எப்படி முடியும்?

## திணை பால் வழுவமைதி

**388.** மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, கோபம், இழிவு என்னும் இவைகளுள் ஒரு காரணத்தினால், ஒரு திணைப் பொருள் வேறு திணைப் பொருளாகவும், ஒரு பாற் பொருள் வேறு பாற் பொருளாகவுஞ் சொல்லப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராவினை "என்னம்மை வந்தாள்" என்ற விடத்து, உவப்பினால் அஃறிணை உயர்திணையாகச் சொல்லப்பட்டது.

"பசுங்கிளியார் தூது சென்றார்" என்ற விடத்து, உயர்வினால் அஃறிணை உயர்திணையாகச் சொல்லப்பட்டது.

"தம்பொரு ளென்பதம் மக்கள்" என்ற விடத்துச், சிறப்பினால் உயர்திணை அஃறிணையாகச் சொல்லப்பட்டது.

பயனில்லாத சொற்களைச் சொல்லும் ஒருவனை "இந்நாய் குரைக்கின்றது" என்ற விடத்துக், கோபத்தினால் உயர் திணை அஃறிணை யாகச் சொல்லப்பட்டது.

"நாங்கடவுளுடைமை" என்றவிடத்து, இழிவினால் உயர்திணை அஃறிணை யாகச் சொல்லப்பட்டது.

தன் புதல்வனை "என்னம்மை வந்தாள்" என்ற விடத்து, மகிழ்ச் சியினால் ஆண்பால் பெண்பாலாகச் சொல்லப்பட்டது.

ஒருவனை "அவர் வந்தார்" என்ற விடத்து, உயர்வினால் ஒருமைப் பால் பன்மை பாலாகச் சொல்லப்பட்டது.

"தேவன் மூவுலகிற்குந் தாய்" என்ற விடத்துச் சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாகச் சொல்லப்பட்டது.

"பெண்வழிச் செல்வானை இவன் பெண்" என்றவிடத்து, இழிவினால் ஆண்பால் பெண்பாலாகச் சொல்லப்பட்டது.

**பரீக்ஷை வினா:-** ஒரு திணைப் பொருள் வேறு திணைப்பொருளாகவும், ஒரு பாற் பொருள் வேறு பாற் பொருளாகவுஞ் சொல்லப்படுமோ?

## ஒருமை பன்மை மயக்கம்

**389.** ஒருமைப் பாலிற் பன்மைச் சொல்லையும், பன்மைப்பாலில் ஒருமைச் சொல்லையும் ஒரோ விடத்துத் தழுவிச் சொல்லுதலும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெயிலெல்லா மறைந்தது மேகம்" என்னு மிடத்து, வெயில் என்னும் ஒருமைப் பாலில் எல்லா மென்னும் பன்மைச் சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது.

"இரண்டு கண்ணுஞ் சிவந்தது" என்னு மிடத்து, இரண்டென்னும் பன்மைப் பாலிற் சிவந்தது என்னும் ஒருமைச்சொற் சேர்த்துச் சொல்லப் பட்டது.

**பரீட்சை வினா:-** ஒருமைப் பாலிற் பன்மைச் சொல்லையும் பன்மைப் பாலில் ஒருமைச் சொல்லையுஞ் சொல்லுதல் உண்டோ?

## இட வழு வமைதி

**390.** ஓரிடத்திற் பிற விடச் சொல்லை ஒரோவிடத்துத் தழுவிச் சொல் லுதல் உண்டு.

"சாத்தன்றா யிவை செய்வேனோ" என்னுமிடத்து, யானெனச் சொல்லல் வேண்டுந் தன்மையிலே "சாத்தான்றா" யெனப்படர்க் கைச் சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. சாத்தன்றாகிய யான்" என்பது பொருள்.

"எம்பியை யீங்குப் பெற்றே னென்னெனக் கரிய தென்றன்" என்னு மிடத்து, நின்னையெனச் சொல்லல் வேண்டு முன்னிலை யிலே "எம்பியை" யெனப் படர்க்கைச் சொற் சேர்த்துச் சொல்லப் பட்டது, "எம்பியாகிய உன்னை" என்பது பொருள்.

யானோ வவனோ யாரிது செய்தார்?
நீயோ வவனோ யாரிது செய்தார்?
நீயோ யானோ யாரிது செய்தார்?
நீயோ வவனோ யானோ யாரிது செய்தார்?
என ஓரிடத்தில் பிற விடம் விரவி வருதலும் உண்டெனக் கொள்க.

**பரீட்சை வினா:-** ஓரிடத்தில் பிற விடச் சொல்லைச் சொல்லுதலும் உண்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால வழுவமைதி

391. முக் காலத்தினுந் தந்தொழில் இடையறாமல் ஒரு தன்மைய வாய் நிகழும் பொருள்களின் வினையை நிகழ்காலத்தாற் சொல்லத்தகும்.

மலை நிற்கின்றது.
தெய்வமிருக்கின்றது.
கடவு ளளிக்கின்றார்.

மலைக்கு நிற்கும், தெய்வத்திற்கு இருத்தலும், கடவுட்கு அளித்தலும் முக் காலத்தினும்உள்ளன வாதல் காண்க.

392. விரைவு, மிகுதி, தெளிவு என்னும் இம்மூன்று காரணங்களாலும், இக்காரணங்கள் இல்லாமலும், ஒரு காலம் வேறொரு கால மாகச் சொல்லவும் படும்.

உண்பதற் கிருப்பவனும் உண்கின்றவனும் விரைவிலே தம்மை உடன் கொண்டு போக அழைப்பவனுக்கு, "உண்டேன், உண்டேன்" வந்தேன், வந்தேன்" என்ற விடத்து, விரைவு பற்றி எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டன.

களவு செய்ய நினைப்போன் கையறுப்புண்டான் என்ற விடத்துக், களவு செய்யிற் கையறுப்புண்ணல் மிகுதி யாதலால் எதிர் காலம் இறந்த காலமாகச் சொல்லப்பட்டது. கை யறுப்புண்ணல் தவறினுந் தவறு மாத லால் மிகுதி யெனப்பட்டது.

"எறும்பு முட்டை கொண்டு திட்டை யேறின் மழை பெய்தது" என்ற விடத்து, எறும்பு முட்டை யெடுத்து மேட்டி லேறினால் மழை பெய்தல் தெளிவாதலால், எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப் பட்டது.

"யாம் பண்டு விளையாடுவ திச்சோலை" யாம் பண்டு விளை யாடுகிற திச்சோலை"- இவைகளில், அக்காரணங்கள் இல்லாமலே இறந்தகாலம் எதிர்காலமும் நிகழ்காலமு மாகச் சொல்லப்பட்டன.

**பரீட்சை வினாக்கள்:-** முக்காலத்தினுந் தந்தொழில் இடையறாமல் ஒரு தன்மையவாய் நிகழும் பொருள்களின் வினைய எக்காலத்தாற் சொல்லத் தகும்? ஒரு காலம் வேறொரு காலமாகச் சொல்லவும் படுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினைமுத லல்லனவற்றை வினைமுதல் போலச் சொல்லல்

**393.** செயப்படு பொருளையும், கருவியையும், இடத்தையும் செயலையும், காலத்தையும், வினைமுதல் போல வைத்து, அவ்வினை முதல் வினையை அவைகளுக்கு ஏற்றிச் சொல்லுதலும் உண்டு.

இம்மாடி யான் கொண்டது- செயப்படு பொருள்
இவ்வெழுத்தாணி யானெழுதியது- கருவி
இவ்வீடி யானிருந்தது-இடம்
இத்தொழில் யான் செய்தது-செயல்
இந்நாள் யான் பிறந்தது-காலம்

**பரீட்சை வினா:-** செயப்படு பொருளையுங் கருவியையும் இடத்தையும் செயலையுங் காலத்தையும் வினைமுதல் போல வைத்து, அவ்வினை முதல் வினையை அவைகளுக்கு ஏற்றிச் சொல்லுதலும் உண்டோ?

## அடைமொழி

**394.** பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறும், இனமுள்ள பொருள்களுக்கே யன்றி இனமில்லாப் பொருள்களுக்கும் அடை மொழிகளாய் வரும்.

அடையினால் அடுக்கப்பட்டது அடைகொளி யெனப்படும். அடை யெனினும் விசேடண மெனினும் பொருந்தும். அடைகொளி யெனினும் விசேடிய மெனினும் பொருந்தும்.

| இனமுள்ளன | இனமில்லன | | |
|---|---|---|---|
| நெய்க்குடம் | உப்பளம் | - | பொருள் |
| குளநெல் | ஊர்மன்று | - | இடம் |
| கார்த்திகைவிளக்கு | நாளரும்பு | - | காலம் |
| பூமரம் | இலைமரம் | - | சினை |
| செந்தாமரை | செம்போத்து | - | குணம் |
| ஆடுபாம்பு | தோய்தயிர் | - | தொழில் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரீசைஷ வினா:-** பொருளாதி யாறும், இனமுள்ள பொருள்களுக்கே யன்றி, இனமில்லாப் பொருள்களுக்கும் அடைமொழிகளாய் வருமோ?

## சிறப்புப் பெயர் இயற்பெயர்

**395.** ஒரு காரணம் பற்றி வரும் சிறப்புப் பெயரினாலும் காரணம் பற்றாது வரும் இயற் பெயரினாலும் ஒரு பொருளைச் சொல்லு மிடத்துச், சிறப்புப் பெயரை முன்வைத்து இயற்பெயரைப் பின் வைத்தல் சிறப்பாம்.

சோழியன் கொற்றன்
பாண்டியன் குலசேகரன்
தமிழ்ப்புலவன் கம்பன்

இனிக் கொற்றன் சோழியன் என இயற்பெயர் முன்னும் வருதல் காண்க. இன்னும் இயற்பெயர் முன் வருமிடத்து வைத்தியநாத நாவலன் கச்சியப்பன் புலவன் என இறுதி விகாரமாக வருதலுங் காண்க.

**பரீசைஷ வினாக்கள்:-** ஒரு காரணம் பற்றி வருஞ் சிறப்பு பெயரினாலும், காரணம் பற்றாது வரும் இயற்பெயரீனாலும் ஒரு பொருளைச் சொல்லுமிடத்து. எதை முன் வைத்து எதைப் பின் வைத்தல் சிறப்பாம்? இயற் பெயர் சிறப்புப் பெயருக்கு முன் வருதல் இல்லையோ? இயற் பெயர் முன் வருமிடத்து அதனிறுதி விகாரமாக வருதலு முண்டோ?

## வினாவிடை

**396.** வினாவாவது, அறியக் கருதியதை வெளிப்படுத்துவதாம். விடையாவது, வினாவிய பொருளை அறிவிப்பதாம்.

**வினா, உசா, கடா, என்பன ஒருபொருட் சொற்கள்**

**விடை, செப்பு, உத்தரம், இறை என்பன ஒரு பொருட் சொற்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**397.** வினாவையும், விடையையும் வழுவாமற் காத்தல் வேண்டும்.

உயி ரெத்தன்மைத்து? - வினா வழாநிலை
உயி ருணர்தற் றன்மைத்து - விடைவழாநிலை
கறக்கின்ற வெருமை பாலோ சினையோ? - வினாவழு
தில்லைக்கு வழி யாது? எனின், சிவப்புக் காளை
முப்பது பணம், என்பது - விடை வழு

**398.** வினா, அறியாமை, ஐயம், அறிவு, கொளல், கொடை, ஏவல், என அறுவகைப்படும்.

1. ஆசிரியரே ! இப்பாட்டிற்குப் பொருள் யாது? அறியாமை வினா
2. குற்றியோ ? மகனோ? – ஐய வினா.
3. மாணக்கனே ! இப்பாட்டிற்குப் பொருள் யாது ? அறிவினா.
4. பய றுண்டோ? செட்டியாரே! கொளல் வினா
5. தம்பிக் காடையில்லையா? – கொடை வினா
6. தம்பீ ! உண்டாயா? – ஏவல் வினா

**399.** விடை, சுட்டு, எதிர்மறை, உடன்பாடு. ஏவல், வினா வெதிர் வினாதல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், இன மொழி என எட்டு வகைப்படும். இவற்றுள், முன்னைய மூன்றுஞ் செவ்வனிறை பின்னைய ஐந்தும் இறை பயப்பன.

| | வினா | விடை | | |
|---|---|---|---|---|
| 1. | தில்லைக்கு வழியாது? | இது | - | சுட்டு |
| 2. | இது செய்வாயா? | செய்யேன் | - | எதிர்மறை |
| 3. | இது செய்வாயா? | செய்வேன் | - | உடன்பாடு |
| 4. | „ | நீ செய் | - | ஏவல் |
| 5. | „ | செய்யேனோ? | - | வினாவெதிர்வினாதல் |
| 6. | „ | உடம்பு நொந்தது | - | உற்ற துரைதல் |
| 7. | „ | உடம்பு நோம் | - | உறுவது கூறல் |
| 8. | „ | மற்றையது செய்வேன் | - | இனமொழி |

**பரீட்சை வினாக்கள் :-** வினாவாவது யாது? விடையாவது யாது? வினாவை யும் விடையையும் எவ்வாறு காத்தல் வேண்டும்? வினா எத்தனை வகைப்படும்? விடை எத்தனை வகைப்படும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுட்டு

400. படர்க்கைப்பெயரோடு சுட்டுப்பெயர் சேர்ந்து வரின். அப் படர்க்கைப் பெயர் முடிக்குஞ் சொற் கொள்ளுமிடத்து அதற்குப் பின் வரும்: முடிக்குஞ் சொற் கொள்ளா விடத்து அதற்குப் பின்னு முன்னும் வரும்.

1. நம்பி வந்தான்; அவனுக்குச் சோறிடுக
   எருது வந்தது அதற்குப் புல்லிடுக.

2. நம்பி யவன்; அவ னம்பி

**பரீக்ஷை வினா:-** படர்க்கைப் பெயரோடு சுட்டுப் பெயர் சேர்ந்து வரின். அச் சுட்டுப் பெயர் அப் படர்க்கைப் பெயர்க்கு எவ்விடத்து வரும்?

**மரபு**

401. மரபாவது, உலக வழக்கிலுஞ் செய்யுள் வழக்கிலும் எப் பொருட்கு எப்பெயர் வழங்கி வருமோ, அப்பொருளை அச் சொல்லாற் கூறுதலாம்.

| | |
|---|---|
| ஆனை மேய்ப்பான் பாகன் | குதிரைக்குட்டி |
| ஆடு மேய்ப்பான் இடையன் | பசுக்கன்று |
| ஆனை யிலண்டம் | கீரிப்பிள்ளை |
| ஆட்டுப் புழுக்கை | கோழிக்குஞ்சு |
| யானைக்குட்டி | தென்னம்பிள்ளை |
| யானைக்கன்று | மாங்கன்று |

**பரீக்ஷை வினா:-** மரபாவது யாது?

## முற்றும்மை

402. இத்தனை யென்று தொகையுற்று நிற்கும் பொருளும், எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளும், முடிக்குஞ் சொல்லைப்பெற்று வருமிடத்து, முற்றும்மை பெற்று வரும்.

1. தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார்
2. ஒலி முன் னிருள் எங்கு மில்லை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரீக்ஷை வினா:-** இத்தனை யென்று தொகையுற்று நிற்கும் பொருளும் எக் காலத்துக்கும் எவ்விடத்தும் இல்லாத பொருளும், முடிக்குஞ் சொல்லைப் பெற்று வருமிடத்து. எவ்வாறு வரும்?

## ஒரு பொருட் பன்மொழி

**403.** சொல்லின்பந் தோன்றுதற் பொருட்டு ஒருபொருண் மேல் இரு சொற்கள் தொடர்ந்து வருதலும் உண்டு.

நாகிளங் கமுகு — மீமிசை ஞாயிறு
புனிற்றிலங் கன்று — உயர்தோங்கு பெருவரை

**பரீக்ஷை வினா:-** ஒரு பொருண் மேல் இரு சொற்கள் காரணமின்றித் தொடர்ந்து வருதலும் உண்டோ?

## அடுக்குச்சொல்

**404.** ஒரு சொல், விரைவு, வெகுளி, உவகை, அச்சம், துன்பம் முதலிய காரணம்பற்றி, இரண்டு முதல் மூன்றளவு அடுக்கிக் கூறப்படும்.

1. உண்டே னுண்டேன் போ போ போ- விரைவு
2. எய் யெய் எறி எறி எறி-கோபம்
3. வருக வருக; பொலிக பொலிக பொலிக – உவகை
4. பாம்பு பாம்பு; தீத் தீத் தீ- அச்சம்
5. உய்யே னுய்யேன்; வாழேன் வாழேன்- துன்பம்

அசை நிலைக்கு இரண்டளவும், இசைநிறைக்கு இரண்டு முதல் நான்களவும், அடுக்கிக் கூறப்படும்.

1. அன்றே யன்றே-அசைநிலை

2. ஏயேயம்பன் மொழிந்தனள் யாயே
நல்குமே நல்குமே நல்குமே நாமகள்
பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ } இசை நிறை

சலசல, கலகல, என்பவை முதலியன பிரியாது இரட்டைச் சொல்லாகவே நின்று பொருள்படுதலால், அடுக்கிய சொல்லல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரீக்ஷை வினாக்கள்:-** அடுக்குத்தொடருள், ஒரு சொல்லே அடுக்கிக் கூறப்படும் போது, எவ்வெவ் விடத்தில் எத்தனை எத்தனை அடுக்கிக் கூறப்படும்? இக்காரணங்கள் ளின்றி ஒரு சொல் இங்ஙனம் அடுக்கிக் கூறப்படுதல் இல்லையோ? சலசல, கலகல,என்பவை முதலியன அடுக்கிய சொல்லல்லவோ?

## சொல்லெச்சம்

405. சொல்லெச்சமாவது, வாக்கியத்தில் ஒரு சொல் எஞ்சி நின்று வருவித் துரைக்கப்படுவதாம்.

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்."

இதிலே சேர்ந்தார் பிறவிப் பெருங்கடல் நீந்துவர் எனச் சேர்ந்தார் என்னும் ஒரு சொல் வருவித் துரைக்கப்படுதலாற் சொல்லெச்சம்.

**பரீக்ஷை வினா:-** சொல்லெச்சமாவது யாது?

## இசையெச்சம்

406. இசையெச்சமாவது, வாக்கியத்தில் அவ்வவ் விடத்திற்கு ஏற்ப இரண்டு முதலிய பல சொற்கள் எஞ்சி நின்று வருவித் துரைக்கப்படுவதாம்.

"அந்தாமரை யன்னமே நின்னை யானகன் றாற்றுவனோ?"

இதிலே என் னுயிரினும் சிறந்த நின்னை எனப் பல சொற்கள் வருவித் துரைக்கப் படுதலால் இசையெச்சம்.

**பரீக்ஷை வினா:-** இசையெச்சமாவது யாது?

**ஒழிபியல் முற்றிற்று**

**தொடர்மொழியதிகாரம் முற்றுப் பெற்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுபத முடிபு

## பெயர்ப் பகுபதங்கள்

**அவன்** என்னுஞ் சுட்டுப் பொருட்பெயர்ப் பகுபதம், அ என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, இடையில் வகர மெய் தோன்றி, அம்மெய்யின் மேல் விகுதி அகர உயிரேறி முடிந்தது.

**தமன்** என்னும் கிளைப் பொருட்பெயர்ப் பகுபதம், தாம் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்றுப், பகுதி முதல் குறுகி, இறுதி மகர மெய்யின் மேல் விகுதி அகர வுயி ரேறி முடிந்தது.

**பொன்னன்** என்னும் பொருட்பெயர்ப் பகுபதம், பொன் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்றுப் பகுதி யீற்று னகர மெய் இரட்டித்து, இரட்டித்த னகர மெய்யின் மேல் விகுதி அகர வுயி ரேறி முடிந்தது.

**நிலத்தன்** என்னும் இடப்பெயர்ப் பகுபதம், நிலம் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே அத்துச் சாரியையும் பெற்றுப், பகுதி யீற்று மகர மெய்யுஞ் சாரியையின் முதல் அகரமும் ஈற்று உகரமுங் கெட்டு, உகரங் கெட நின்ற தகர மெய்யின் மேல் விகுதி அகர வுயி ரேறி முடிந்தது.

**பிரபவன்** என்னுங் காலப்பெயர்ப் பகுபதம், பிரபவம் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்றுப் பகுதி யீற்று அம் குறைந்து வகர மெய் யீறாக நின்று, அவ்வகர மெய்யின் மேல் விகுதி அகர வுயி ரேறி முடிந்தது.

**திணிதோளன்** என்னுஞ் சினைப்பெயர்ப் பகுபதம், திணிதோள் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்றுப், பகுதி யீற்று ளகர மெய்யின் மேல் விகுதி அகர உயிரேறி முடிந்தது.

**நல்லன்** என்னும் குணப்பெயர்ப் பகுபதம், நன்மை, என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்றுப், பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யீற்று மை விகுதி கெட்டு நல் என நின்று, லகர மெய் இரட்டித்து, இரட்டித்த லகர மெய்யின் மேல் விகுதி அகர வுயி ரேறி முடிந்தது.

**கரியன்** என்னும் குணப்பெயர் பகுபதம், கருமை என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்றுப், பகுதியீற்று மை விகுதி கெட்டு, இடை உகரம் இகரமாகத் திரிந்து, யகர வுடம்படுமெய் தோன்றி, அம்மெய்யின்மேல் விகுதி அகர வுயிரேறி முடிந்தது,

**செய்யன்** என்னும் குணப்பெயரும் பகுபதம், செம்மை என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்றுப், பகுதி யீற்று மை விகுதி கெட்டு, இடை நின்ற மகர மெய் யகர மெய் யாகத் திரிந்து, அது இரட்டித்து, இரட்டித்த மெய்யின் மேல் விகுதி அகர வுயி ரேறி முடிந்தது.

**ஓதுவான்** என்னுந் தொழிற்பெயர்ப் பகுபதம், ஓது என்னும் பகுதியும், ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே வகர விடைநிலையும் பெற்று, இடைநிலை மெய்யின் மேல் விகுதி அகர வுயி ரேறி முடிந்தது. ஓதுத லுடையவனட என்பது பொருள். *

**நன்மை** என்னும் பண்புபெயர்ப் பகுபதம், நல் என்னும் பகுதியும், மை என்னும் பண்புபெயரும் விகுதியும் பெற்றுப், பகுதி யீற்று லகர மெய் னகர மெய்யாகத் திரிந்து முடிந்தது.

**வருதல்** என்னுந் தொழிற்பெயர்ப் பகுபதம், வா என்னும் பகுதியும், தல் என்னும் தொழிற்பெயர் விகுதியும் பெற்றுப், பகுதி முதல் குறுகி, ரகர வுகரம் விரிந்து முடிந்தது.

**உடுக்கை** என்னுந் தொழிற்பெயர்ப் பகுபதம், உடு என்னும் பகுதியும், கை யென்னுந் தொழிற்பெயர் விகுதியும் பெற்று, விகுதிக் ககர மிகுந்து முடிந்தது.

---

* ஓதுவான் என்பது எதிர்காலத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதமாயின், ஓது பகுதி ஆன் விகுதி வகர மெய் எதிர்கால விடை நிலை. எதிர்கால வினையெச்சப் பகுபதமாயின் ஒது பகுதி வான் எதிர்கால வினையெச்ச விகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடுக்கை** என்னுஞ் செயப்படுபொருட் பெயர்ப் பகுபதம், உடு என்னும் பகுதியும், ஐ என்னுஞ் செயப்படு பொருள் விகுதியும், அவைகளுக்குக் கிடையே குச் சாரியையும் பெற்றுச், சாரியைக் ககரம் மிகுந்து, சாரியை யீற்றுகரங் கெட்டு, உகரங் கெட நின்ற ககர வொற்றின் மேல் விகுதி ஐகார வுயி ரேறி முடிந்தது.

**எழுத்து** என்னுஞ் செயப்படுபொருட் பெயர்ப் பகுபதம், எழுது என்னும் பகுதியோடு ஐ என்னுஞ் செயப்படு பொருள் விகுதி புணர்ந்து, அவ்விகுதி கெட்டுக், கெட்ட விடத்துத் தகர மிரட்டித்து முடிந்தது.

**ஊண்** என்னுஞ் செயப்படுபொருட் பெயர்ப் பகுபதம், உண் என்னும் பகுதியோடு ஐ என்னுஞ் செயப்படு பொருள் விகுதி புணர்ந்து, அவ்விகுதி கெட்டுப், பகுதி முதல் நீண்டு முடிந்தது.

**காய்** என்னும் வினைமுதுற்பொருற் பெயர்ப் பகுபதம், காய் என்னும் பகுதியோடு இ என்னும் வினைமுதற் பொருள் விகுதி புணர்ந்து, அவ்விகுதி கெட்டு முடிந்தது.

## வினைமுற்றுப் பகுபதங்கள்

**உண்டான்** என்னும் இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம், உண் என்னும் பகுதியும், ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே இறந்த காலங் காட்டும் டகர விடை நிலையும் பெற்று, இடைநிலை டகர மெய்யின் மேல் விகுதி ஆகாரவுயிரேறி முடிந்தது.

**உண்கின்றான்** என்னும் நிகழ்காலத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம், உண் என்னும் பகுதியும், ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே கின்று என்னும் நிகழ்கால இடைநிலையும் பெற்று, இடைநிலை யீற்று உகரங் கெட நின்ற றகர மெய்யின் மேல் விகுதி ஆகார வுயிரேறி முடிந்தது.

**உண்ணுவான்** என்னும் எதிர்காலத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம், உண் என்னும் பகுதியும், ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே எதிர்காலங்காட்டும் வகர விடைநிலையும், பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே உகரச் சாரியையும் பெற்றுப், பகுதி யீற்று ணகர மெய் இரட்டித்து, இரட்டித்த ணகர மெய்யின் மேற் சாரியை உகர மேறி, இடைநிலை வகர மெய்யின்மேல் விகுதி ஆகார வுயிரேறி முடிந்தது. *

* உண்ணுவான் என்பது எதிர்கால வினையெச்சப் பகுபதமாயின் உண் பகுதி, உ சாரியை, வான் எதிர்கால வினையெச்ச விகுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடந்தனன்** என்னும் இறந்தகாலத் தெரிநிலை வினை முற்றுப் பகுபதம், நட என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் அவைகளுக்கு இடையே இறந்தகாலங்காட்டுந் தகர விடைநிலையும்' இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே அன் சாரியையும் பெற்று' இடை நிலைத் தகர மிகுந்து, மிகுந்த தகர வல்லொன்று மெல்லொற்றாக விகாரப் பட்டு, இடைநிலைத் தகர மெய்யின் மேற் சாரியை அகர வுயிரேறிச், சாரியை யீற்று னகர மெய்யீன் மேல் விகுதி அகர வுயிரேறி முடிந்தது.

**வருகின்றனன்** என்னும் நிகழ்காலத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம், வா என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கிடையே கின்று என்னும் நிகழ்கால இடைநிலையும், இடை நிலைக்கும் விகுதிக்கும் இடையே அன் சாரியையும் பெற்றுப் பகுதி முதல் குறுகி, ரகர வுகரம் விரிந்து, இடைநிலை யீற்று உகரங் கெட்டு, உகரங் கெட நின்ற றகர வொற்றின் மேற் சாரியை அகர வுயிரேறிச் சாரியை யீற்று னகர மெய்யின் மேல் விகுதி அகர வுயிரேறி முடிந்தது.

**நடப்பான்** என்னும் எதிர்கால்த் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம், நட என்னும் பகுதியும், ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையேய, எதிர்காலங்காட்டும் பகர விடைநிலையும் பெற்று, இடைநிலைப் பகரம் மிகுந்து, இடைநிலைப் பகர மெய்யின் மேல் விகுதி ஆகார வுயிரேறி முடிந்தது.

**நடந்தது** என்னும் இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம். நட என்னும் பக்தியும், து என்னும் ஒன்றன்பால் விகுதியும்' அவைகளுக்கு இடையே இறந்த காலங் காட்டுந் தகர விடைநிலையும், இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே அகரச் சாரியையும் பெற்று, இடைநிலைத்தகரம் மிகுந்து, மிகுந்த தகர வல்லொற்று மெல்லொற்றாக விகாரப்பட்டு, இடைநிலைத் தகரம் வல்லொற்றின் மேற் சாரியை அகர வுயிரேறி முடிந்தது.

**நடப்பித்தான்** என்னும் பிறவினைப் பகுபதம், நட என்னும் பகுதியும், பி என்னும் பிறவினை விகுதியும் பெற்று, விகுதிப் பகர மிகுந்து, அனைத்தும் ஒரு பகுதியாய் நின்று, ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், பகுதிக்கும் விகுதிக்கும் இடையே இறந்தகாலங் காட்டுந் தகரவிடை நிலையும் பெற்று, இடைநிலைத் தகரம் மிகுந்து, இடைநிலைத் தகர மெய்யின் மேல் விகுதி ஆகார வுயிரேறி முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடிக்கப்பட்டான்** என்னுஞ் செயப்பாட்டு வினைமுற்றுப் பகுபதம், அடி என்னும் பகுதியும், படு என்னஞ் செயப்பாட்டு வினை விகுதியும், அவைகளுக்கு இடையே குச் சாரியையும், அகரச் சாரியையும் பெற்றுச், சாரியைக் ககரம் மிகுந்து, சாரியை யீற்று உகரங் கெட்டு, உகரங் கெட நின்ற ககர மெய்யின் மேலே சாரியை அகரவுயிரேறி, விகுதிப் பகர மிகுந்து அடிக்கப்படு என அனைத்தும் ஒரு பகுதியாய் நின்று, ஆன் என்னும் ஆண்பால் விகுதி பெற்றுப், படு என்பதனுடைய உகர மூர்ந்த டகர மெய் யிரட்டித்து, உகரவுயிர் கெட்டு உகரங் கெட்ட டகர மெய்யின் மேல் விகுதி ஆகார வுயிரேறி முடிந்தது.

**நடவான்** என்னும் எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம், நட் என்னும் பகுதியும், ஆன் என்னும் விகுதியும் அவைகளுக்கு இடையே எதிர்மறை ஆகார விடைநிலையும் பெற்று, அவ்விடைநிலை கெட்டு, வகர வுடம்படுமெய் தோன்றி, அம்மெய்யின் மேல் விகுதி ஆகார வுயிரேறி முடிந்தது.

**நடக்கின்றிலன்** என்னும் எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம், நட என்னும் பகுதியும், அன் என்னும் விகுதியும், அவைகளுக்கு இடையே கின்று என்னும் நிகழ்கால விடைநிலையும் இல் என்னும் எதிர்மறை யிடைநிலையும் பெற்றுக், கின்றிடைநிலையின் ககரம் மிகுந்து ஈற்றுகரங் கெட்டு, உகரங் கெட நின்ற றகரம் மெய்யின் மேல் எதிர்மறை யிடைநிலை இகர மேறி, அவ்விடைநிலை யீற்று லகர மெய்யின் மேல் விகுதி அகர வுயிரேறி முடிந்தது.

**எழுந்திட்டான்** என்னும் இறந்தகாலதெரிநிலை வினைமுற்றுப் பகுபதம், எழு என்னும் பகுதியும். இடு என்னும் பகுதிப்பொருள் விகுதியும், அவைகளுக்கு இடையே துச் சாரியையும் பெற்றுச், சாரியைத் தகரமிகுந்து, மிகுந்த தகர வல்லொற்று மெல்லொற்றாக விகாரப்பட்டுச், சாரியை யீற்றுகரங் கெட்டு, உகரங்கெட நின்ற தகர மெய்யின் மேல் விகுதி இகர வுயிரேறி, எழுந்திடு என அனைத்தும் ஒரு பகுதியாக நின்று, ஆன் என்னும் ஆண்பால் விகுதி பெற்று, இடு என்பதனுடைய உகர மூர்ந்த டகர மெய் இரட்டி உகர உயிர் கெட்டு, உகரங் கெட நின்ற டகர மெய்யின் மேல் விகுதி ஆகார வுயிரேறி முடிந்தது.

**கழிந்தன்று** என்னும் இறந்த காலத் தெரிநிலை வினை முற்றுப் பகுபதம், கழி என்னும் பகுதியும், று என்னும் ஒற்றன்பால் விகுதியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகளுக்கு இடையே இறந்த காலங் காட்டுந் தகர விடை நிலையும், இடை நிலைக்கம் விகுதிக்கும் இடையே அன் என்னுஞ் சாரியையும் பெற்று, இடைநிலைத் தகர மிகுந்து, மிகுந்த தகர வல்லொற்று மெல் லொற்றாக விகாரப்பட்டு, இடை நிலைத்தகர வல்லொற்றின் மேற் சாரியை அகர வுயிரேறி முடிந்தது, கழிந்தது என்பது பொருள்.

**கழிந்தின்று** என்னும் எதிர்மறை இறந்தகாலத் தெரிநிலை வினை முற்றுப் பகுபதம், கழி என்னும் பகுதியும், று என்னும் ஒற்றன்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே இறந்த காலங் காட்டுந் தகர விடை நிலையும், அவ்விடை நிலைக்கும் விகுதிக்கும் இடையே இல் என்னும் எதிர்மறை யிடை நிலையும் பெற்றுக். கால விடைநிலைத் தகரம் மிகுந்து, மிகுந்த தகர வல்லொற்று மெல்லொற்றாக விகாரப்பட்டு, இடை நிலைத் தகர மெய்யின் மேல் எதிர்மறை யிடைநிலை இகர வுயிரேறி, இடை நிலை யீற்று லகர மெய் னகர மெய்யாகத் திரிந்து முடிந்தது. கழிந்திலது என்பது பொருள்.

**கோடும்** என்னும் எதிர்காலத் தெரிநிலை வினை முற்றுப் பகுபதம், கொள் என்னும் பகுதியும், தும் என்னும் தன்மை பன்மை எதிர்கால விகுதியும் பெற்றுப் பகுதி முதல் நீண்டு, பகுதி யீற்று ளகரங் கெட்டு, விகுதித் தகரம் டகரமாகத் திரிந்து முடிந்தது.

**அற்று** என்னும் குறிப்பு வினைமுற்றுப் பகுபதம், அ என்னும் பகுதியும், று என்னும் ஒற்றன்பால் விகுதியும் பெற்று, விகுதியும் பெற்று, விகுதி றகர வல்லொற்று மிகுந்து முடிந்தது *

**அனையர்** என்னுங் குறிப்பு வினை முற்றுப் பகுபதம், அ என்னும் பகுதியும், அர் என்னும் பலர்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே னகரச் சாரியையும் ஐகாரச் சாரியையும் பெற்றுச். சாரியை னகர மெய்யின் மேற் சாரியை ஐகார வுயிரேறி, யகர வுடம்படுமெய் தோன்றி, அம் மெய் யின் மேல் விகுதி அகர வுயிரேறி முடிந்தது.

**இன்று** என்னுங் குறிப்பு வினை முற்றுப் பகுபதம், இல் என்னும் பகுதியும், று என்னும் ஒன்றன் பால் விகுதியும் பெற்றுப், பகுதி யீற்று லகர மெய் னகர மெய்யாகத் திரிந்து முடிந்தது.

---

*அற்று என்பது இறந்தகால வினையெச்சப் பகுபதமாயின், அறு பகுதி உ விகுதி உகர மூர்ந்த றகர மெய் இரட்டித்து முடிந்தது எனக் கொள்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணர்த்துகிற்பன்** என்னும் எதிர்காலத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம், உணர்ந்து என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே எதிர்காலங் காட்டும் பகரவிடை நிலையும், பகுதிக்கும் காலவிடை நிலைக்கும் இடையே கில் என்னும் ஆற்றல் இடைநிலையும் பெற்று, ஆற்ற லிடைநிலை யீற்று லகர மெய் றகர மெய்யாகத் திரிந்து, இடைநிலைப் பகரத்தின் மேல் விகுதி அகர வுயிரேறி முடிந்தது.

**செய்** என்னும் முன்னிலை யேவ லொருமை வினை முற்றுப் பகுபதம், செய் என்னும் பகுதியோடு ஆய் என்னும் முன்னிலை யேவல் விகுதி புணர்ந்து, அவ் விகுதி கெட்டு முடிந்தது.

## பெயரெச்சப் பகுபதங்கள்

**அடித்த** என்னும் இறந்த காலப் பெயரெச்சப் பகுபதம், அடி என்னும் பகுதியும், அ என்னும் பெயரெச்ச விகுதியும் அவைகளுக்கு இடையே இறந்த காலங் காட்டுந் தகர விடை நிலையும் பெற்று இடை நிலைத் தகரம் மிகுந்தும், இடைநிலைத் தகர மெய்யின் மேல் விகுதி வுயிரேறி முடிந்தது. அகர

**அடிக்கின்ற** என்னும் நிகழ்காலப் பெயரெச்சப் பகுபதம், அடி என்னும் பகுதியும், அ என்னும் பெயரெச்ச விகுதியும் அவைகளுக்கு இடையே கின்று என்னும் நிகழ்கால விடை நிலையும் பெற்று, இடை நிலைக் ககரம் மிகுந்தது, இடைநிலை யீற்றுகரங் கெட்டு, உகரங் கெட நின்ற றகர மெய்யின் மேல் விகுதி அகர வுயிரேறி முடிந்தது.

**அடிக்கும்** என்னும் எதிர்காலப் பெயரெச்சப் பகுபதம் அடி என்னும் பகுதியும், உம் என்னும் எதிர்காலப் பெயரெச்ச வீகுதியும், அவைகளுக்கு இடையே குச் சாரியையும் பெற்றுச், சாரியைக் ககரம் மிகுந்து, சாரியை யீற் றுகரங் கெட்டு, உகரங் கெட நின்ற ககர மெய்யின் மேல் விகுதி உகர வுயிரேறி முடிந்தது.

## வினையெச்சப் பகுபதங்கள்

**நின்று** என்னும் இறந்தகால வினையெச்சம் பகுபதம், நில் என்னும் பகுதியும், உ என்னும் வினையெச்ச விகுதியும், அவை களுக்கு இடையே இறந்தகாலங் காட்டும் றகர விடை நிலைப் பெற்றுப்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி யீற்று லகர மெய் இடை நிலை றகர மெய்க்கு இனமாகிய னகர மெய்யாகத் திரிந்து, இடைநிலை றகர மெய்யின் மேல் விகுதி உகர வுயிரேறி முடிந்தது.

**நிற்க** என்னும் முக்காலத்திற்கும் உரிய வினையெச்சப் பகுபதம் நில் என்னும் பகுதியும், அ என்னும் வினையெச்ச விகுதியும், அவைகளுக்கு இடையே குச் சாரியையும் பெற்றுப், பகுதி யீற்று லகர மெய் றகர மெய் யாகத் திரிந்து, சாரியை, யீற்று உகரங் கெட்டு, உகரங்கெட நின்ற ககர மெய்யின் மேல் விகுதி அகர வுயிரேறி முடிந்தது.*

**நிற்கின்** என்னும் எதிர்கால வினையெச்சப் பகுபதம், நில் என்னும் பகுதியும், இன் என்னும் எதிர்கால வினையெச்ச விகுதியும், அவைகளுக்கு இடையே குச் சாரியையும் பெற்றுப், பகுதி யீற்று லகர மெய் றகர மெய்யாகத் திரிந்து, சாரியை யீற்று உகரங் கெட்டு, உகரங்கெட நின்ற ககர மெய்யின் மேல் விகுதி இகர வுயிரேறி முடிந்தது.

**தோன்றியக்கால்** என்னும் எதிர்கால வினையெச்சப் பகுபதம் தோன்று என்னும் பகுதியும், கால் என்னும் எதிர்கால வினையெச்ச விகுதி யும், அவைகளுக்கு இடையே இன் சாரியையும் அகரச்சாரியையும் பெற்றுப், பகுதி யீற்று உகரங் கெட்டு, உகரங் கெட நின்ற றகர மெய்யின் மேற் சாரியை இகர வுயிரேறிச், சாரியை யீற்று னகர மெய் குறைந்து, யகர வுடம்படு மெய் தோன்றி, அம்மெய்யின் மேற் சாரியை அகர வுயிரேறி, விகுதிக் ககர மிகுந்து முடிந்தது.

**பின்வரும் பொதுப் பகுபதங்களை முடிக்க:-**

**சாவான்:-**

1. உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்று
2. எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்று
3. எதிர்கால வினையெச்சம்

---

* நிற்க என்பது வியங்கோள் வினைமுற்றுப் பகுபதமாயின் நில்-பகுதி க வியங்கோள் விகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாய்:– 1. முன்னிலை யேவ லொருமை வினைமுற்று
2. முன்னிலை யொருமை யெதிர்மறை வினைமுற்று

செய்யீர்:– 1. முன்னிலை யேவற் பன்மை வினைமுற்று
2. முன்னிலை பன்மை யெதிர்மறை வினைமற்று

தழைப்ப:– 1. பலர்பாற் படர்க்கை வினைமுற்று
2. பலவின்பாற் படர்க்கை வினைமுற்று
3. செய வெனெச்சம்

அன்ன:– 1. குறிப்பு வினைமுற்று
2. குறிப்புவினை பெயரெச்சம்

செவ்விய:– 1. குறிப்பு வினைமுற்று
2. குறிப்புவினைப் பெயரெச்சம்

வேட்கும்:– 1. எதிர்கால வினைமுற்று
2. எதிர்காலப் பெயரெச்சம்

வந்து:– 1. தன்மை யொருமை வினைமுற்று
2. இறந்தகால வினையெச்சம்

உண்டு:– 1. தன்மை யொருமை வினைமுற்று
2. இறந்தகால வினையெச்சம்
3. அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று

தேடிய:– 1. இறந்தகால வினைமுற்று
2. வியங்கோள் வினைமுற்று
3. இறந்தகாலப் பெயரெச்சம்
4. எதிர்கால வினையெச்சம்

## சொல்லிலக்கணங் கூறுதல்

### அவன் வந்தான்

அவன் என்பது உயர்திணை யாண்பா லொருமைப் படர்க்கைச் சுட்டுப்பெயர் திரிபின்மையாகிய எழுவாயுரு பேற்றது் அது வந்தான் என்னும் வினைப் பயனிலை கொண்டது.

**வந்தான்** என்பது உயர்திணை யாண்பா லொருமைப் படர்க்கை யிறந்தகால உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்று் அது அவன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலை செய்தவன் நரகத்தில் வீழ்ந்து வருந்துவான்

கொலை என்பது தொழிற்பெயர்; ஆக்கப்படு பொருளில் வந்த ஐ என்னும் இரண்ட னுரு பேற்றது அது செய்தவன் என்னும் வினை கொண்டது.

**செய்தவன்** என்பது உயர்திணை யாண்பா லொருமைப் படர்க்கை யிறந்தகால உடன்பாட்டுத் தெரிநிலை வினையாலணையும் பெயர் திரிபின்மையாகிய எழுவா யுரு பேற்றது அது **வருந்துவான்** என்னும் வினைப் **பயனிலை கொண்டது.**

**நரகம்** என்பது பால்பகா வ·றிணைப் படர்க்கைப் பெயர்; பிறிதின் கிழமைப் பொருட்கு இடமிடமாக நிற்கும் இடப்பொருளில் வந்து இல் என்னும் ஏழ னுரு பேற்றது. அது வீழ்ந்து என்னும் வினை கொண்டது.

**அத்து** என்பது சாரியை யுரு பிடைச்சொல்.

**வீழ்ந்து** என்பது செய்தென் வாய்பாட் டிறந்தகால உடன் பாட்டுத் தெரிநிலைவினை வினையெச்சம்; **வருந்துவான்** என்னும் வினை கொண்டது.

**வருந்துவான்** என்பது உயர்திணை யாண்பா லொருமைப் படர்க்கை யெதிர்கால உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்று; செய்தவன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் நின்றது.

## கொற்றனானவன் தன்னை எதிர்த்த பகைவரை வாளான் மாய வெட்டினான்

**கொற்றன்** என்பது உயர்திணை யாண்பா லொருமைப் படர்க்கைப் பெயர் **ஆனவன்** என்னும் எழுவாய்ச் சொல்லுரு பேற்றது; அது **வெட்டினான்** என்னும் வினைப் பயனிலை கொண்டது.

**தான்** என்பது ஒருமைப் படர்க்கைப் பொதுப்பெயர். அடையப்ப டும் பொருளில் வந்து ஐ என்னும் இரண்ட னுரு பேற்றது; அது எதிர்த்த என்னும் வினை கொண்டது.

**எதிர்த்த** என்பது செய்த வென் வாய்பாட் டிறந்த கால உடன் பாட்டுத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்; **பகைவர்** என்னும் வினைமுதற் பெயர் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பகைவா்** என்பது உயர்திணை பலர்பாற் படர்க்கைப் பெயர் அழிக்கப்படு பொருளில் வந்த ஐ என்னும் இரண்ட னுருபேற்றது; அது **வெட்டினான்** என்னும் வினை கொண்டது.

**வாள்** என்பது பால்பகா வ.்.றிணைப் படர்க்கைப் பெயர் கருவிப் பொருளில் வந்த ஆல் என்னும் மூன்றனுரு பேற்றது் அது **வெட்டினான்** என்னும் வினை கொண்டது.

**மாய** வென்பது செய வென் வாய்பாட்டு முக்காலத்திற்கு முரிய தெரிநிலைவினை வினையெச்சம்; இங்கே காரியப்பொருளில் வந்தமையால் எதிர்காலத்தது் வெட்டினான் என்னும் வினை கொண்டது.

**வெட்டினான்** என்பது உயர்திணை யாண்பா லொருமைப் படர்க்கை யிறந்தகால உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்று; கொற்றன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் நின்றது.

## சொற்றொடர் ரிலக்கணங் கூறுதல்

**அவன் வந்தான்** – அல்வழிச் சந்தியில் எழுவாய்த் தொடர்

**கொலை செய்தவன்** – வேற்றுமைச் சந்தியில் இரண்டாம் வேற்றமைத்தொகை.

**செய்தவன் நகரத்தில்** – அல்வழிச் சந்தியில் தழாத் தொடராகிய எழுவாய்த்தொடர்

**நகரத்தில் வீழ்ந்து** – வேற்றுமைச் சந்தியில் ஏழாம் வேற்றுமை விரி.

**வீழ்ந்து வருந்துவான்**- அல்வழிச் சந்தியில் வினையெச்சத் தொடர்.

**தழாத்தொடராவது நிலைமொழியானது வருமொழியைப் பொருட் பொருத்தமுறத் தழுவாத தொடர்· பொருட் பொருந்த முறத் தழுவிய தொடர் தழுவுதொடர்.**

பரமபதி துணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லுதமிழ் எங்கே? சுருதி எங்கே - எல்லோரும்
ஏத்துபுராண ஆகமங்கள் எங்கே? பிர சங்கம் எங்கே
ஆத்தன் அறிவுஎங்கே? அறை

சி. வை. தாமோதரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றல் பப்ளிக்கேஷன், கொழும்பு - 06
☎: 011-2360239.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org